# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN

VOLUME - 1    Reg NO.TNBIL/2016/70171    ISSUE - 7

JULY 2017 TAMIL & MALAYALAM

ANNUAL SUBSCRIPTION - Rs.60/=    FOREIGN - Rs.600/=


*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*


✆ 0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com




கர்த்தருக்குள் அன்பானவர்களே!

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களை இந்த மாத பத்திரிக்கை மூலம் சந்திப்பதில் சந்தோஷம் அடைகிறேன்.

கடந்த சில மாதங்களாக என் மனதில் நம் சபைகளைப் பற்றியும்,நான் செய்த 52 வருட ஊழியங்களைப்பற்றியும் மிகவும் யோசிக்கலானேன். 52 வருடங்களாக இந்தியா முழுவதும் எல்லா **CSI,CNI,லூத்தரன்** சபைகளையும் இன்னும் பல ஆயிரக் கணக்கான சபைகளையும் சந்தித்து கர்த்தருடைய வசனத்தை மிகத்தெளிவாக இரவும்,பகலும் இடைவிடாமல் சபை கன்வென்ஷன்களில் உபதேசித்தேன். ஒவ்வொரு பிரசங்கமும் 2மணி நேரம் சில இடங்களில் 2.1/2 மணி நேரம் நிறுத்தாமல் பிரசங்கித்தேன்.

ஏராளமானவர்கள் மனந்திரும்பி இன்று பாஸ்டர்களாக, பிஷப்புகளாக,பெரிய பிரசங்கிமார்களாக,சுவிசேஷர்களாக,ஆயிரக்கணக்கில் ஊழியம் செய்கிறார்கள். ஜெப நேரத்தில் ஆல்டர்கால் கொடுத்து பிரசங்கித்ததில் உணர்த்தப்பட்ட பலர் மிஷனரிகளாக தங்களை சமர்பித்து ஊழியங்களை இப்போதும் நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் **சபைகளிலோ**,சபை **மக்களிடத்திலோ** பெருத்த மனமாற்றம் ஏற்பட்டதாக தெரியவில்லை. கூட்ட நேரங்களில் கூட்ட முடிவில் நிறைய மக்கள் கர்த்தருக்கு தங்களை ஒப்புக்கொடுக்கிறார்கள். மனந்திரும்பி அவர்கள் பாவஅறிக்கை செய்கிறதை கண்டு தேவனைத்துதித்தேன். ஆனால் தேவன் நம்மிடம் மிகவும் எதிர்ப்பார்ப்பது **சாட்சியுள்ள ஜீவியம்** அதை நான் மக்களிடம் காணமுடியவில்லையே என்ற ஆதங்கம் என்னை வேதனைப்படுத்துகிறது.

மேடையில் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் அழுதுக்கொண்டு **சாட்சிகூறுகிறார்கள்**

JULY 2017

தங்கள் சாட்சியை சிலர் துண்டுப்பிரதிகளில் அச்சடித்து விநியோகிக்கிறார்கள். ஆனால் வாழ்க்கையில், வீட்டில் அவர்களிடம் **சாட்சியில்லை,**வெளியில் **சாட்சியில்லை,**தொழிலில் **சாட்சியில்லை,**பண விஷயத்தில் **சாட்சியில்லை.** இவர்கள் எத்தனையோ முறை மேடையில் ஆலய ஆராதனையில் சாட்சி கூறி என்ன பிரயோஜனம்?. சொந்த வாழ்க்கையில் **சாட்சியை காட்டாதவர்கள், ஊழியம் செய்து என்ன பிரயோஜனம்?. ஜெபகூட்டங்களை** நடத்தி என்ன பிரயோஜனம்?, மிஷனரிகளை இவர்கள் தங்கள் பணத்தால் தாங்கி **என்ன பிரயோஜனம்?.** தேவனின் **கட்டளையே சாட்சியாயிருங்கள்** என்பதுதானே!.

ஒரு கேள்வி கேட்டுபாருங்கள். உங்களைப்பற்றி வீட்டில், உங்கள் மனைவி சாட்சி கூறுகிறாரா?, எந்த விஷயத்துக்காகவாவது எனக்காக ஜெபியுங்கள் என்று மனைவி கணவனிடமோ, கணவன் மனைவியிடமோ கேட்பாரேயானால் அதுதான் **சாட்சியுள்ள குடும்பம்** ஆகும்.

**கர்த்தர் கூறுகிறார்: நானே தேவன் என்பதற்கு நீங்களே சாட்சியாக இருங்கள்** என்றார். ஏசா 43:12.

யாராவது உங்கள் தெய்வத்தை காட்டுங்கள் என்றால் இயேசுவின் போட்டோவை அல்லது சிலுவையை காட்டாதீர்கள். **உங்களையே காட்டுங்கள்** என்றுதான் தெய்வம் கேட்கிறார். கிறிஸ்துவை நீங்கள் பிரதிபலிக்க முடியுமா?

பல வருடங்களாக என் பிரசங்கத்தில் **நல்ல நாள்** பார்க்கதிருங்கள், **முகூர்த்த நாள்** பார்க்காதீர்கள் என்று கூறி சலித்துப்போனேன். உபா 18:10ல் **நாள் பார்க்கிறவன்** சபிக்கப்பட்டவன் என்றும் வேதம் கூறுகிறது என்பதை தெளிவாக குறிப்பிட்டு பேசினேன். **கர்த்தரை நம்பி நன்மையை செய்** என்றுதான் வேதம் கூறுகிறது. **நாளை நம்பும்படி** வேதம் கூறவில்லை. ஆண்டவர் உண்டாக்கிய நாள் எல்லாம் **நல்லது** என்றுதானே கர்த்தர் கூறினார்.

இதை நான் பிரசங்கிக்கும் இடமெல்லாம் கூறியிருக்கிறேன். ஆனால் கேட்பாறில்லை. என் பிரசங்கம் நன்றாக இருக்கிறது என்று மெச்சினார்கள்!. ஆனால் தங்கள் கிரியையில் அதைக் காட்டவில்லையே!. **கடை** ஆரம்பிக்க,**வீடு அஸ்திபாரம்** போட,**புதிய வீட்டில் பால்** காய்ச்ச, **வாகனம்** வாங்க, எங்காவது **புறப்பட நல்லநேரம், நல்ல நாள்** இவைகளை **இரகசியமாக** பார்க்கிறார்களே! இவர்களெல்லாம் இத்தனை வருடங்கள் வேத புத்தகத்தை இவர்கள் கையில் வைத்து என்ன பிரயோஜனம்? **மனந்திரும்பிவிட்டேன்** என்று சாட்சி சொல்லி என்ன பிரயோஜனம்?. இதை நினைக்கும்போது நான் **பிரசங்கித்தது,** நான் **உபவாசித்தது** மற்றவர்களுக்காக கர்த்தரிடம் கூறி ஜெபித்து கூட்டத்தில் அழுதது எல்லாம் வீண் என்றுதானே ஆகிப்போனாது!. என் ஊழியம் எல்லாம் வீணாகிப்போனதோ என்று வேதனைப்படுகிறேன்.

■ **ஆசீர்வாத தட்டைப்பற்றி அது தவறு என்று** மிக வெளிப்படையாக பேசியவன் நான் ஒருவனே!. **ஆசீர்வாதத்தை** ஏலத்தில் வாங்கமுடியாது. பெரும்தொகையை **ஆலயத்துக்கோ, ஊழியத்துக்கோ** கொடுக்கவேண்டுமானால் அதை ரொக்கமாக கொடுத்துவிடுங்கள். **ஆசீர்வாத தட்டு** என்ற **விக்கிரகத்தை** ஏலத்தில் வாங்கித்தான் **அந்த பணத்தை** கொடுக்க வேண்டுமா? இது என்ன புது பழக்கம்?. **திருநெல்வேலியில்** எந்த பிறவியோ இந்த சாட்சிகெட்ட **ஆசீர்வாத தட்டின்** ஏலத்தை ஆரம்பித்து வைத்தார். இன்று **கர்நாடகா,ஆந்திரா,** (கேரளவைத்தவிர) மற்ற மாநிலங்களில் இந்த சாட்சிகெட்ட காணிக்கை தீ மாதிரி பரவி ஒன்றுக்கு மேல் நான்கு ஐந்து **ஆசீர்வாத தட்டுகளை** வைத்து ஏலத்தில் வாங்குகிறார்கள்.

பல இடத்தில் ஆசீர்வாத தட்டை வைத்தவர்களே அதை வாங்கிக்கொள்கிறார்கள். சில இடத்தில் அதில் வைக்கப்பட்ட **நகைக்கு** ஆசைப்பட்டு **ஆசீர்வாத தட்டை** ஏலத்தில் எடுக்கிறார்கள். **ஏலம் எடுத்த** அந்த ஆசீர்வாத தட்டு உன் வீட்டுக்கு வந்தால் **கர்த்தரின் மனம்** சந்தோஷப்படுமா? வேதனைப்படுமா? உன் வாழ்க்கையில் பாவமன்னிப்பு பெற்று மனந்திரும்பி கர்த்தருடைய பிள்ளையாய் சாட்சியோடு வாழ்ந்தால் போதுமே!, **ஆசீர்வாதம் தட்டு ரூபத்தில்அல்ல.** குடும்ப சமாதானம் மூலமாக, உன் **வியாபார விருத்தியில்**,உன் **திருமண வாழ்க்கையில்,** உன் பிள்ளைகளின் **படிப்பில்**, உன் **விளைநிலத்தில்** அந்த ஆசீர்வாதத்தை உன் கண்ணாலேயே காணலாமே!. அந்த மாதிரியான **ஆசீர்வாதத்தோடு** தேவன் **வேதனையை கூட்டார்** என்று நீதிமொழிகளில் எழுதியிருக்கிறதே!. அது வசனத்தின்படி வாழ்கிறவர்களுக்கு கிடைக்கும் ஆசீர்வாதம் அல்லவா?அந்த உண்மையான ஆசீர்வாதம் உங்களுக்கு வேண்டாமா?.

ஆனால் ஆசீர்வாத தட்டு என்ற **சாட்சியில்லாத அந்த** தட்டை ஏலத்தில் பெரிய தொகை பணம் கொடுத்து வாங்க இயலாத **ஏழை மக்களின்** உள்ளத்தின் வேதனையை இந்த ஏலத்தில் எடுத்தவர்கள் சிந்தித்துண்டா?. நமக்கெல்லாம் அந்த ஆசீர்வாத தட்டு வாங்க முடியாதா? என்று கேட்கும் சிறுமிக்கு உங்கள் பதில் என்ன?.

**அந்த ஏலம்** சபையில் உள்ள **ஏழை மக்களுக்கல்ல.** அது **பணக்காரர்களின்** ஆசீர்வாத தட்டு. தேவனை வேதனைப்படுத்தும் அந்த **ஆசீர்வாத தட்டை வைப்பவர்களுக்கும்,** அதை **வாங்குபவர்களுக்கும்** ஆசீர்வாதத்துக்கு பதில் தேவகோபத்தை பல விதததில் நீங்கள் அனுபவிப்பீர்கள்!. உங்கள் நோக்கம் **சபைக்கு பணம்** சேர்ப்பது. ஆனால் வழி **பிசாசின்** வழியாகிப்போனதே? சபை ஒரு **வியாபார குகையாகிப்போனதே? சபை ஒரு** ஏல மண்டியாகிப்போனதே!.

இதற்காகவும் அந்தந்த சபைகளுக்காகவும் நாம் அழுது ஜெபித்தது வீண். நான் என் சரீர சக்தியை இழக்க கொடுத்து **இவைகளை தவறு** என்று நான் பலமுறை பிரசங்கித்ததும், எழுதியதும் எல்லாம் வீணாகிப்போனதே!. **கர்த்தரின் ஆசீர்வாதத்தை** ஒருவனும் **ஏலத்தில்** வாங்கவே முடியாது என்று எப்போதுதான் உணர்வீர்கள்?

இவைகளைப்பார்த்து தான் இயேசு குருத்தோலை பவனியான்று **கண்ணீர்விட்டார்** என்று எழுதியுள்ளது. அன்று அழுத பிறகுதான் கர்த்தர் சாட்டையை கையில் எடுத்து **காசு விற்கிறவர்கள்,ஏலம் வாங்குபவர்கள்** எல்லாரையும் ஆலயத்திலேயே அடித்து விளாசினார். என் ஜெப வீட்டை **கள்ளர் குகையாக்கினீர்கள்** என்று கர்ஜித்தார். உங்களுக்கும் கர்த்தரின் கையில் அடிவாங்கவேண்டுமா?.

இதைக்குறித்து நான் பேசிய என் பிரசங்கத்தை கேட்ட **பிஷப்மார்களுக்கு** ஆசீர்வாத **தட்டை தடுக்க** தைரியம் இல்லை. அது தவறு என்று கூற ஆயர்களும் பயந்து தாங்கள் இஷ்டமில்லாமலே அந்த தட்டை உயர்த்தி ஆசீர்வதித்துதொலைப்போம் என்று மனதில் நினைத்து கொண்டு இதன் விளைவை நானா அனுபவிக்கப்போகிறேன்!, அந்த தட்டை **வைத்தவர்களும், வாங்கியவர்களும்தானே** அனுபவிக்கப்போகிறார்கள் என்று ஆயர் அவர்களும் தலைகவிழ்த்து அந்த குடும்பத்துக்காக ஜெபித்து தொலைக்கவேண்டியுள்ளது!.

இதுமாதிரி பல உபதேசங்களை பல வருடங்களாக நான் பிரசங்கித்தும் ஆசீர்வாத **தட்டுகள் முன்பைவிட அதிமாகிப்போனது**. இந்த விஷயத்திலும் **ஜாதி, டவுரி, ரொக்கம்**

வாங்கும் விஷயத்திலும் என்னை நேசிக்கும் என் ஜாமக்காரன் வாசர்களும்கூட வசனத்துக்கு கீழ்ப்படிந்ததாக தெரியவில்லை!. வாசகர்களே மாறவில்லை!, மற்றவர்களைப்பற்றி கூறவேவேண்டாம்!.

இப்படி பல விஷயத்தில் சாட்சியற்ற வாழ்க்கை வாழும் சபை மக்களைக்குறித்த ஆதங்கத்தில்தான் மனம்நொந்து இதை எழுதுகிறேன்.

இன்னும் பல விஷயத்தில் சபைகளைப்பற்றி பல விஷயங்கள் இந்த நாட்களில் என் மனதை மிகவும் வேதனைடைய செய்துவிட்டது.

■ பெரும்பாலான எல்லா **CSI,லூத்தரன்** சபைகளிலும் பண ஊழல்கள் பெருகிவிட்டன. சபைகள் நடத்தும் **கல்லூாரி,பள்ளிகள்,மெடிக்கல் காலேஜ்,வேலை நியமனம் இப்படி** எல்லாவற்றிலும் பண ஊழல் பெருகிவிட்டன. ஒவ்வொருமுறையும் **பிஷப்** தேர்ந்தெடுப்பதில் பெருத்த தொகை **லஞ்சமாக** வெவ்வேறு குறுக்குவழிகளில் சினாடில் உள்ள சில நபர்களுக்கு மறைமுகமாக சென்றடைகின்றன.

■ **சபை நடத்தும் அல்லது டையோசிஸ் நடத்தும்** நீதிமன்ற **வழக்குகளின்** எண்ணிக்கை ஏராளம். அதற்கு சபையிலிருந்தும் டையோசிஸ் கணக்கிலிருந்தும் தான் பணம் எடுத்து செலவழிக்கப்படுகின்றன. இதற்கு முடிவு வராதா?

சபைகள் உயிர்மீட்சி பெற்று கூடி ஜெபிக்கதொடங்கினால் அன்றி நம் சபைகளில் ஒரு மாற்றமும் வராது. இப்படிப்பட்ட பிரச்சனைகள் நாளுக்குநாள் பெருகிக்கொண்டேபோவதால்தான் மக்கள் தவறான உபதேசங்கள் நிறைந்த வேறு சபைகளுக்கு ஓடுகிறார்கள். இங்கொரு காலும், அங்கொரு காலும் வைத்து இரண்டு சபைகளிலும் அங்கத்தினராக சேர்ந்து ஆராதிக்கிறார்கள். ஜெபிப்போமா!

கடந்த வாரம் என் ஊழியம் முடித்து என் வீடுவந்து சேர ரயில் பயணம் செய்தபோது இதையெல்லாம் நான் எண்ணிப்பார்த்து மனவேதனையுடன், என் பிரசங்கம் அத்தனையும் வீணாய்ப்போனதா! என்று யோசித்து மனவேதனை எனக்குள் கடந்தது, நான் வீடுவந்து சேர்ந்ததும் இதை எழுதுகிறேன்.

**காதுள்ளவன் கேட்கக்கடவன். பெயர் கிறிஸ்தவர், சாட்சியில்லா வாழ்க்கை** வாழும் நபர்களுக்கு கர்த்தர் மறுபடியும் மறுபடியும் கொடுக்கும் எச்சரிக்கை இது ஆகும்.

**கர்த்தர் உங்களுக்காக பரிந்து பேசிகொண்டிருக்கிறார்.** இதை வாசிக்கும் என் அன்பு வாசகர்கள் இவைகளைப்பற்றி யோசித்து மற்றவர்களுக்கும் உங்கள் சபையில் அறிவுரைக்கூறுவீர்களா?.

கடந்த மாதம் காணிக்கை அனுப்பிய அத்தனை பேர்களுக்கும் நன்றி கூறுகிறேன்.

■ ஜாமக்காரனுக்கு முகம் தெரியாத புதுபுது நபர்கள் ஆன்-லைன்மூலமாக பணம் அனுப்பியதை என் வங்கி கணக்கு புத்தகத்தில் கண்டேன். கர்த்தருக்கே மகிமை. அடையாளம் தெரியாத அந்த அன்பர்களுக்காக ஜெபிக்கிறேன். அவர்களுக்காகவும் தெய்வத்தை துதிக்கிறேன்.

**கர்த்தரின் பணியில்**

**டாக்டர்.புஷ்பராஜ்**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# கேள்வி - பதில்

# ஜாமக்காரனின் பதில்கள்

## கூட்டங்களை எப்படி ஆசீர்வதிக்கமுடியும்?

**கேள்வி:** 2017 மே மாத ஜாமக்காரனில் இலங்கையில் ஏப்ரல் மாதம் நடந்த **கூட்டங்களை கர்த்தர் கிருபையாக ஆசீர்வதித்தார்** என்று நீங்கள் எழுதியது பிழை- **கர்த்தர் கூட்டங்களை எப்படி ஆசீர்வதிக்கமுடியும்? உயிருள்ள மனிதர்களைத்தான் ஆசீர்வதிக்கமுடியும்!** இதுபோன்ற பிழைகள் ஜாமக்காரனில் காணப்படுகின்றன. - R.Walter Jayabalan - Chennai-7

**பதில்:** இந்த கேள்வி கேட்ட நபர் நல்ல கிறிஸ்தவர்தான். ஜாமக்காரன் வாசகர்தான். ஆனால் இப்படிப்பட்ட குதர்க்கமான கேள்விகள் நிறைய கேட்டுக்கொண்டேயிருப்பார். இப்போதொல்லாம் நான் இவருக்கு பதில் எழுதுவதில்லை. இப்படியும் சிலர் வாசகர்கள் எனக்கு உண்டு. இலங்கையில் **கூடிய கூட்டங்கள்** என்று கூறும்போது **கூட்டங்கள்** என்றால் எதை குறிப்பிடுகிறேன் என்று கூடவா இவரால் கிரகிக்கமுடியவில்லை!.

உங்கள் தமிழ் மிகவும் கேவலமாக இருக்கிறது. தமிழ்நாட்டில் வேறு எந்த பத்திரிக்கையிலும் இவ்வளவு கேவலமாக இல்லை என்றும் எழுதியிருக்கிறார். நான் என்ன இலக்கியம் அல்லது இலக்கண தமிழ் பத்திரிக்கையா நடத்துகிறேன். இதோடு இவருக்கு அனுப்பும் பத்திரிக்கையை நிறுத்த ஏற்பாடு செய்துவிட்டேன். பாவம் அவரின் நல்ல தமிழை ஜாமக்காரன் பத்திரிக்கை கெடுப்பானேன்!. ❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## தொழில் செய்யலாமா?

**கேள்வி:** ஒரு **மனந்திரும்பின விசுவாசி - ஒரு அவிசுவாசியுடன்** இணைந்து தொழில் செய்யலாமா? அவிசுவாசியுடன் கூட்டு தொழில் செய்யலாமா?

**பதில்:** நாம் இந்த பாவ உலகத்தில் வாழ்வதாலே புறமதத்தினரோடும்,அவிசுவாசிகளுடனும் இணைந்துதான் வாழவேண்டியுள்ளது. அது தவிர்க்கமுடியாதது?. ஆனால் தண்ணீரில் மிதக்கும் தாமரை இலையைபோல் இலைகள் தண்ணீரில் மிதந்தாலும் இலையின்மேல் தண்ணீர் துளிகள் நின்றாலும் **இலைமட்டும் நனையாது.** அதுபோல இந்த உலக வாழ்க்கையில் வியாபாரத்திலும், தொழிலிலும் கூட்டுவைத்துக்கொள்ளலாம். குறிப்பாக சொந்தக்காரர்களோடு மட்டும் கூட்டு வைத்து தொழில் செய்வதில் ஜாக்கிறதையாக இருக்கவேண்டும். காரணம் சின்ன பிரச்சனை யிலும் மனதாங்கல் உண்டாகலாம். அதனால் முழு குடும்பத்தின் சந்தோஷம் பாதிக்கப்படும்.

பொதுவாக கூட்டுதொழில் யாவும் கொஞ்ச காலத்துக்குதான் செயல்படும். அதன்பிறகு ஒவ்வொருவரும் அவரவர் சொந்த காலில் நிற்கதான் ஆசைப்படுவார்கள். மன கசப்போடு பிரிவதைவிட அந்த எண்ணம் உள்ளத்தில் வந்தவுடன் அல்லது கூட்டுதொழில் செய்யும் மற்ற நபருக்கு அப்படி தனித்து இயங்கும் எண்ணம் வந்துவிட்டது என்று அறிந்தால் சமாதானத்துடன் ஒருவருக்கொருவர் பேசி ஒருவருக்கொருவர் விட்டுகொடுத்து பிரிந்து செயல்பட்டால் உங்கள் நட்பு நிலைத்து நிற்கும். அப்படி அல்ல என்றால் கோர்ட் நடவடிக்கை வரை போராடவேண்டிவரும்.

**திருமண வாழ்க்கையில் மட்டும் விசுவாசி - அவிசுவாசியுடன் இணையக்கூடாது.** அந்நிய நுகத்தில் இணைக்கப்படக்கூடாது என்று வேதம் கூறுகிறது. ❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**கேள்வி:** கடந்த மாதம் **நாலுமாவடி சகோ.மோகன் சி.லாசரஸ்** அவர்கள் பிரசங்கம் செய்த போது ஒவ்வொரு விசுவாசியும் அனுபவிக்கும் **வியாதி,பிரச்சனை,தலைமுறை** தலைமுறையாய் தொடர்ந்து வரும். வியாதிகள் யாவும் நம் **முன்னோர்கள் செய்த பாவத்தால்** அல்லது நம் **பெற்றோர் செய்த பாவத்தால்** அவைகள் **சாபமாக** உங்களை தாக்குகிறது என்றார். அந்த செய்தி 2017 மே 31ம் தேதி ஏஞ்சல் டிவியிலும் வெளியிட்டார்கள். உங்கள் பிரசங்கம் இவர் கருத்தில் மிகவும் வித்தியாசப்படுகிறதே?.

**பதில்:** என் பிரசங்க செய்தியின் கருத்தோடு ஒப்பிடுவதைவிட வேத புத்தகத்தோடு ஒப்பிட்டு பாருங்களேன். எசே 18:2-4,20, எரே 31:29,30, உபா 24:16, 2 இராஜ 14:6. அன்றைய பழைய ஏற்பாட்டு காலத்தில் அப்பன் செய்த பாவத்துக்கு 7 தலைமுறை பிள்ளைகளுக்கு சாபமும், வேதனையும் தொடரும். அப்பா செய்த தவறுக்கு மகன் கொலை செய்யப்படவேண்டும். இப்படிப்பட்ட சாபங்கள்,தண்டனைகள் கர்த்தரே ஏற்படுத்தினார். அதேபோல் **கொலைக்கு கொலை,பல்லுக்கு பல்,சூட்டுக்கு சூடு** இப்படியெல்லாம் அன்றைய காலத்தில் கர்த்தரே இந்த சட்டங்களை இயற்றினார். காரணம், அந்த காலத்தில் உபதேசம் இல்லை. மக்கள் முதிர்ச்சியடையாத காலம். இப்படிப்பட்ட சட்டத்தினாலாவது மக்கள் பயந்து மற்றவர்களை கொலை செய்யாது இருப்பார்கள். பாவம் செய்தால் தன் சந்ததியினர் எல்லாரும் சாபம் அனுபவிப்பார்களே என்ற பயத்தில் பாவம் செய்யாதிருப்பார்கள் என்று கர்த்தர் எதிர்ப்பார்த்தார். அதனால்தான் அந்த சட்டம், பழைய ஏற்பாட்டு காலத்திற்கு எழுதப்பட்டது.

சட்டத்தை இயற்றியவருக்கு அந்த சட்டத்தை மாற்றவும் அதிகாரம் உண்டு. ஆகவேதான் அந்த காலத்திலேயே கர்த்தர் தொடர் சாபத்தை நீக்கினார். **அப்பன் திராட்சை பழம்** சாப்பிட்டால் மகன் வாய் புளித்தது என்பது நியாயம் இல்லை.அதனால் அந்த பழமொழியை கர்த்தர் ஞாபகப்படுத்தி பாவம் செய்த **ஆத்துமாவே சாகும்** என்றார். ஆதாம்-ஏவாள் காலத்திலிருந்து தொடர்ந்த ஜென்ம பாவத்தையும் இயேசுகிறிஸ்து சிலுவையில் சுமந்து தீர்த்தார். ஆகவேதான் **பாவம்,சாபம் யாவும் நீக்கி** என்னை இரட்சித்தார் என்று பாட்டு பாடுகிறோம். அப்படியிருக்க எங்கிருந்து வரும் **சாபம்? நாலுமாவடி** போன்ற ஊழியர்கள்,அவரைப்போல உள்ள பழைய ஏற்பாட்டு உபதேசத்தை இப்போதும் கைக்கொள்ளும் ஊழியர்கள் சாபம் நீங்கவும் சுகமாவதற்கும் **நாலுமாவடி** வாருங்கள்,**திருப்பத்துார்** வாருங்கள் என்று அழைப்பு விடுத்துக்கொண்டிருக்கிறார்கள். வசனத்துக்கு கீழ்ப்படியாதவர்கள்,வேதத்தை முறைப்படி வாசிக்காதவர்கள் இப்படிப்பட்ட ஊழியர் கூறும் பொய்யை நம்பி **புளிசாதத்தை** கட்டிக்கொண்டு பழனி-திருப்பதிக்கு போய்வருவதைப்போல் மாதாமாதம் இப்படிப்பட்ட இடத்துக்கு போய்வருகிறார்கள். இந்த ஊழியர்கள் யாரும் புதிய ஏற்பாட்டு **கிறிஸ்தவர்கள் அல்ல.** இவர்கள்

ஆறுதலைகூற மட்டும் புதிய ஏற்பாட்டை பயன்படுத்துவார்கள். **சாபம்** இருக்கிறது என்று கூறும் எந்த ஊழியரிடமும் தயவுசெய்து ஜெபித்துக்கொள்ளாதீர்கள். **சாபத்தைக்குறித்து** ஏற்கனவே ஜாமக்காரனில் எழுதிவிட்டேன். ❖❖❖❖❖❖❖❖❖❖❖

**கேள்வி:** நான் பல வருடம் **ஊழியம் செய்தும் என் தரித்திரமும்,என் கடனும் தீரவில்லை. ஊழியத்திலும் முன்னேற்றமே இல்லை,நான் மிகவும் சோர்வாகிவிட்டேன்.** நான் என்ன செய்வது?.

**பதில்:** உங்களை யார் ஊழியத்துக்கு வர சொன்னது? என்ன **மாதிரி ஊழியம்** செய்கிறீர்கள் என்பதை எழுதவில்லையே? நீங்கள் மனந்திரும்பி,இரட்சிக்கப்பட்டு, ஆத்துமபாரம் கொண்டு பல நாள் **மற்ற ஆத்துமாக்களுக்காக** ஜெபிக்கிறவர்களாக இருந்தால் மட்டுமே ஊழியம் செய்ய தகுதி பெற்றவர் ஆவீர்கள். அதை கர்த்தர் கண்டு ஊழியத்தின் வாசலை தானாக திறந்து உங்களை அழைப்பதை நீங்கள் உணரலாம். இந்த ஆரம்ப அனுபவங்கள் இல்லாமலும் ஊழியம் செய்யலாம். ஒருவர் பாஸ்டராகி ஊழியம் செய்கிறேன் என்றால் உங்களுக்கு எல்லாரும் **காணிக்கை** கொடுப்பார்கள் என்ற தவறான எண்ணம் இப்போதுள்ள பல ஊழியர்களுக்குள் ஏற்பட்டதால்தான். பலர் **போலியான ஊழியங்களைச்செய்து பொய்யான உபதேசங்களை** கையில் பிடித்துக்கொண்டு மக்களை ஏமாற்றுகிறார்கள். பலர் **சபை ஏதும்இல்லாமல்** வீடுகளை சந்திக்கிறேன் என்று கூறி கிறிஸ்தவ வீடுகளைத்தேடி அவர்களை வாழ்த்தி,ஆசீர்வதித்து ஜெபித்தால் கண்டிப்பாக காணிக்கை தருவார்கள் என்று எண்ணி கிறிஸ்தவ பிச்சைக்கார ஊழியர்களாக மாறிக் கொண்டிருக்கிறார்கள். பல வீட்டு பிச்சை சாப்பாட்டை சாப்பிட்டு அனுபவித்த பிச்சைக் காரர்களுக்கு நீங்கள் மாத சம்பளம் தருகிறேன்,கூலி தருகிறேன் என்று கூறினாலும் அவர்களுக்கு எந்த வேலையும் செய்ய உடம்பு வளையாது. சிலநாள் சரியான பிச்சை கிடைக்காதவர்கள் வெறும் கையோடு வீட்டுக்குவந்தால் மனைவியிடம் திட்டு வாங்கி மரியாதை இழந்து உங்களைப்போல் வாடிப்போகிறார்கள். இதனால்தான் பல ஊழியர்களை சொந்த **மனைவிகூட மதிப்பதில்லை,பிள்ளைகளும் மதிப்பதில்லை.**

கர்த்தருடைய ஊழியம் **உலகப்பிரகாரமான வேலையல்ல!**. ஆசீர்வதிக்கப்பட்ட ஒன்றாகும்!. **ஒருவன் எனக்கு ஊழியம் செய்வானானால் கர்த்தர் அவனை கனப்படுத்துவார்** என்ற வாக்குத்தத்தம் உண்மையான ஊழியம் செய்பவருக்கு நிச்சயம் நிறைவேறும். பழைய ஏற்பாட்டில் கர்த்தர் 12 கோத்திரங்களை பிரித்து ஒவ்வொரு கோத்திரத்துக்கும் ராஜ்யத்தையும்,ஆஸ்தியையும் பிரித்துக்கொடுத்தார். ஆனால் 12வது கோத்திரமான ஆசாரியர்- லேவியர் இணைந்த ஊழியர்களின் கோத்திரத்துக்குமட்டும் ஒன்றும் கொடுக்கவில்லை. ஏன் என்று கேட்டபோது கர்த்தர் சொன்னார். **ஊழியர்களுக்கு கர்த்தராகிய நானே சொத்து** என்றார். எத்தனை பாக்கியம்!. கர்த்தரையே **சொத்தாக** பெற்றவர்கள் **தரித்திரர்ஆக** கர்த்தர் சம்மதிப்பாரா?. காணிக்கைக்காக வீடுவீடாய் காணிக்கைபிச்சை எடுக்கவிடுவாரா? **எலியா** என்ற ஊழியனை **காகத்தைக்**கொண்டு போஷித்தவர், நாடே பஞ்சத்தில் கஷ்டப்பட்டபோது **விதவையை** கொண்டு ஊழியக்காரனுக்கு சாப்பாடு கொடுத்து போஷித்தவர். அவருடைய வார்த்தையின்படி வேத வசன தகுதியோடு ஊழியம் செய்கிறவர்களை கர்த்தர் ஒருநாளும் கைவிடமாட்டார். ஒருவேளை ஊழியர் வாழ்க்கையில் குறைவுகள் ஏற்படலாம்,வியாதி வரலாம், பண கஷ்டம் உண்டாகலாம், ஆனால் அதில் ஒரு ஆவிக்குரிய இன்பம் உண்டு. அதை அனுபவித்து ருசித்தவர்களுக்கே தெரியும். உங்களைப்போல் முறுமுறுக்கமாட்டார்கள். துதிப்பார்கள்.

சிலர் தங்கள் பத்திரிக்கைகளில் ஒரு **செங்கலுக்கு 300 ரூபாய்** கொடுப்பவர்கள் 1000பேர் தேவை என்று ஜெபகோபுர ஊழியரைப்போல் மற்றும் ஒரு பிள்ளைக்கு **தலைக்கு 2000 ரூபாய்** அனுப்பு அந்த பிள்ளைகளை ஊழியத்தில் இணைத்து கொள்வேன் என்று கேட்பார்கள்.

நாலுமாவடி **திறப்பின் வாசலுக்கு** 10000 ரூபாய் கொடுத்தேன் மறுவாரமே என் கடனை அறிந்த தேவன் என் வீட்டு வாசலைதட்டி 10 லட்சரூபாய்கள் அடங்கிய பெட்டியை ஒருவர் மூலமாக கொடுக்க ஏற்பாடு செய்தார் என்று ஆசைக்காட்டும் **பொய் சாட்சிகளை** தங்கள் பத்திரிக்கைகளில் வெளியிடமாட்டார்கள்.அது வியாபார ஊழியம். **நீங்கள் வேண்டிக்கொள்ளும் முன்பே உங்களுக்கு இன்னதுதேவை** என்று நம் தேவன் அறிவார் என்ற வேத வசனத்தை ஞாபகப்படுத்தி பாருங்கள். ஆனால் மேலே குறிப்பிட்ட ஊழியர்கள் மக்களிடம் பணம் பறிக்க எண்ணமாய் பொய் பேசுகிறார்கள்!.

[redacted] என் 52 வருட ஊழியங்களில் யாரிடத்திலாவது என் ஊழிய தேவை இவ்வளவு உண்டு. என் குடும்ப தேவை இவ்வளவு உண்டு, கொஞ்சம் பணஉதவி செய்வீர்களா என்று என் பிரசங்கத்திலோ, என் பத்திரிக்கையான ஜாமக்காரனிலோ எப்போதாவது நான் கேட்டது உண்டா?. என் தேவைகளை கர்த்தரிடம்கூட ஜெபத்தில் நான் கேட்டதில்லை என்பதை நீங்கள் அறிவீர்களா? உங்களால் அதை நம்பமுடியாது. ஆனால் அதுதான் என் விசுவாசம். எல்லாருக்கும் வரும் **பணநெருக்கங்கள்,பண தேவைகள்** எனக்கும் வந்தது. என் குடும்ப ஜெபத்தில்கூட நான் அதை கூறியதில்லையே!, என் மனைவியிடம்கூட பண தேவையைக்குறித்து கூறியதில்லையே!. நான் எழுதும் இந்த பதிலை என் மனைவியும் படிக்கிறார். ஒருவேளை என் பிள்ளைகளும், என்கூட பிறந்த சகோதரிகளின் குடும்பங்களும் வாசிப்பார்கள் என்று எனக்கு தெரியும். நான் பொய்யாய் இதை எழுதுகிறனோ?என்பதை அவர்களும் அறிவார்கள் அல்லவா?இந்த விஷயத்தை நான் பொய்யாய் எழுதியிருந்தால் என் மனைவி, என் பிள்ளைகள் என்னை மதிப்பார்களா?என் அலுவலத்தில் பத்திரிக்கை ஊழியத்தில் உதவி செய்பவர்கள் என்னை மதிப்பார்களா?.

**தபால் துறையில்கூட** எனக்கு சிறப்பான மரியாதை உண்டு. EMO வந்த காலத்துக்குமுன் பழைய மணிஆர்டர் பாரத்தின் அடியில் எதற்காக பணம் அனுப்புகிறோம், ஏன் அனுப்புகிறோம் என்றும், குறிப்பிட்டு அதோடு என் ஊழியத்தில், என் பத்திரிக்கை மூலமாக அவர்கள் அனுபவித்த நன்மை என்ன? என்ற வாசகம் அதிலே எழுதியிருப்பார்கள். தபால்துறையில் அதிகம் மணியாடர் யாருக்கு வருகிறதோ அவர்களை கண்காணிக்க சில அதிகாரிகள் உண்டு. தபால் துறை அதிகாரி முதல் தபால் கொண்டுவரும் தபால் ஊழியர்வரை அதை வாசிக்கிறார்கள். அதன்மூலம் அவர்கள் யாவரும் என் ஊழியத்தைப்பற்றி நன்கு அறிவார்கள். அந்த சாட்சி என் ஆண்டவருக்கும் மகிமை மட்டுமல்ல,அது என்னை குற்றமற்ற மனசாட்சி உள்ளவனாக்குகிறது.

இந்த கேள்வியை கேட்ட சகோதரனே!. ஊழியக்காரனே! நீங்கள் யாரோ நான் அறியேன். உங்கள் கேள்வி என்னை இத்தனை விஷயங்களை எழுத வைத்தது. இந்த தருணத்துக்காக தேவனை துதிக்கிறேன். கடைசியாக ஒன்றை கூறிக்கொள்கிறேன். **நாம் கர்த்தருக்கு உண்மையாக இருந்தால் கர்த்தரும் நம்மிடம் உண்மையாக இருப்பார்.**

நீங்கள் ஊழியத்தை விட்டுவிட்டு உங்கள் படிப்புக்கு தகுந்த ஒரு வேலையை தெரிந்தெடுங்கள். ஒரு கூலிவேலையாவது செய்துகொண்டே உங்கள் குடும்பத்தை காப்பாற்றுங்கள். கிடைத்த நேரங்களிளெல்லாம் இயேசுவைப்பற்றி யாரிடமாவது தினசரி கூறுங்கள். நீங்கள் சபைபாஸ்டராக முயற்சிசெய்யவேண்டாம். மேலே கூறியவாறு செயல்படுங்கள். ஒருநாள் முழுநேர ஊழியத்திற்கான வாசலை கர்த்தரே திறந்து அழைப்பார். ❖❖❖

# திரித்துவம்

# TRINITY

## ஜாமக்காரனின் குறிப்பு:

**திரித்துவம்(TRINITY)** என்ற வார்த்தை வேத புத்தகத்தில் நாம் எங்கும் காணமுடியாது. ஆனால் **நம் தெய்வம் திரித்துவம் உள்ளவராக இருக்கிறார்** என்பதற்கு வேதத்தில் ஏராளமான வசனங்களும்,ஆதாரங்களும் நிறைந்து கிடைக்கிறது.

2017 கடந்த மே மாதம் ஜாமக்காரனில் ஜாமக்காரன் வாசகர் ஒருவர் அனுப்பிய **கேள்வி-பதில்** பகுதியில் **திரித்துவத்தைப்பற்றி** தவறான கருத்துக்கள் சுமார் எட்டு இடங்களில் குறிக்கப்பட்டதை நான் அடித்து நீக்கிவிட குறிப்பிட்டேன்.

ஆனால் திருத்தியதை சரிப்படுத்தாமல் அல்லது திருத்தியதை கம்பியூட்டரில் சேவ் செய்யப்படாமல் எழுதியபடியே தவறான கருத்து அப்படியே அச்சாகி வெளிவந்துவிட்டது.

2017 ஜீன்மாத ஜாமக்காரனில் அந்த திருத்தத்தைப்பற்றி குறிப்பிட்டிருந்தேன். ஏராளமானவர்கள் தவறை சுட்டிக்காட்டி ஜாமக்காரனில் இந்த தவறு எப்படி வந்தது என்று கடிதங்களை எழுதி குவித்துவிட்டனர்.

ஆகவேதான் **திரித்துவத்தைக்குறித்து** சில வருடங்களுக்குமுன் ஜாமக்காரனில் வெளியிட்டதை மறுபடியும் வாசகர்களுக்காக தவறை திருத்தி வெளியிடுகிறேன்.

மற்றொன்றையும் குறிப்பிட பாரப்படுகிறேன். **திரித்துவ உபதேசம்** நான் வேதாகம கல்லூரியில் படிக்கும்போதே எல்லாரிடத்திலும் ஏன் அதை கற்றுக்கொடுக்கும் ஆசிரியரிடத்திலும் குழப்பமும் முரண்பாடுள்ள கருத்தாகவே இருந்தது.

நம் **தெய்வத்தின் திரியேக உபதேசத்தைக்குறித்து** நம் வேதத்தில் போதுமான விவரங்கள் தெளிவாகவோ, விளக்கமாகவே நாம் புரிந்துக்கொள்ளும் வகையிலோ காணப்படவில்லை.

மற்றவர் கேட்கும் கேள்வி நீங்கள் **மூன்று தெய்வத்தை ஆராதிக்கிறீர்களா? அல்லது ஒரு தெய்வத்தை** ஆராதிக்கிறீர்கள்?, **தெய்வம் பிதா,குமாரன்,பரிசுத்த ஆவியானவர்** என்கிறீர்களா? **ஒரே தெய்வத்தை தான் ஆராதிக்கிறோம்** என்றும் கூறுகிறீர்கள். ஒரே குழப்பமாக இருக்கிறதே!. இதைக்குறித்து போதிப்பவர்களும், மனித அறிவுக்கு ஒத்துக்கொள்ளும் வகையில் விளங்கவைப்பதில்லை என்கிறார்கள்.

ஆம். **திரித்துவம்** ஒரு ஆழமான அதுவும் மிகமிக ஆழமான **கருக்கலான சத்தியம்** ஆகும். இதை விளக்க பலர் **தண்ணீர்,ஆவி,மழை** என்று பல விதத்தில் உதாரணங்களைக்கூறி விளங்க வைக்க முயலுகிறார்கள். ஆனால் நம் அறிவு அதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறது.

ஆகவே வேத வசனம் கூறுகிறதவாது: **சகோதரரே, எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணவேண்டாம்.** 1 கொரி 4:6.

நமக்கு நம் வேதத்தில் திரித்துவத்தைப்பற்றி எவ்வளவு எழுதப்பட்டிருக்கிறதோ அந்த அளவு மட்டும் சிந்தித்தால் போதுமானாது. **திரித்துவம்** நம் ஆண்டவரைப்பற்றிய ஒரு தெய்வ இரகசியம் ஆகும்.

ஆவியானவர் நாம் கர்த்தரைப்பற்றி எவ்வளவு அறியவேண்டுமோ அந்த அளவு மட்டுமே நமக்கு எழுதி வைத்துள்ளார். **எழுதப்பட்டதற்கு மிஞ்சி நாம் நம் அறிவைக்கொண்டு ஆராய்ச்சி** செய்தால் சில சமயம் நம் விசுவாசமே கேள்விக்குறியாகிவிடும்.

ஏற்கனவே நான் **திரித்துவ தெய்வத்தைப்பற்றிய விஷயம் யாவும் தெய்வ இரகசியம்** என்று எழுதினேன்.

வேதத்தில் கொலேசயர் 2:19ம் வசனத்தின்மூலமாக **காணாதவைகளிலே துணிகரமாக நுழையக்கூடாது** என்று எச்சரிக்கப்படுகிறோம். இந்த விஷயத்தில் நாம் நம் சொந்த வியாக்கியானங்களை கொடுத்துவிடக்கூடாது.

■ **திரித்துவத்தைப்பற்றி டாக்டர்.தியோடர் வில்லியம்ஸ்** அவர்களும் மிக ஜாக்கிறதையாக வசனத்தைவிட்டு விலாகமல் வேதவசனம் எழுதப்பட்ட அளவிலேயே திரியோகத்தைப்பற்றி அழகாக விளக்கியுள்ளார். இந்த அளவு நாம் விளங்கிக்கொண்டால் போதுமானது.

பழைய ஏற்பாட்டில் மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள். **வெளிப்படுத்தபட்டவைகளோ........ நமக்கு...... உரியவைகள்** என்று எழுதியுள்ளது. உபா 29:29.

■ ஆனால் மற்றொரு ஆச்சரியமான விஷயம்!. நம் இயேசுகிறிஸ்துவின் **பாடு,மரணம் மூலம்** பாவ மன்னிப்பை பெற்றவர்களாகிய நமக்குள் இந்த **திரியேக தெய்வம்** வந்து வாசம் பண்ணுகிறார் என்ற **சந்தோஷ இரகசியத்தை** இயேசுகிறிஸ்து யோ 14:16, 23,24 வசனங்களின் மூலமாக நமக்கு அறிவிக்கிறார்.

**திரியேக தெய்வத்தை** நாம் நம் **இதயத்தில்** சுமந்து வாழ்வது எத்தனை பெரிய பாக்கியம். இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்ட நாம் யாவரும் பெரும் பாக்கியசாலிகளாகும். அதனால்தான் **தேவனுடைய இராஜ்யம் உங்களுக்குள் வந்திருக்கிறது** என்று இயேசுகிறிஸ்து குறிப்பிட்டார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

ஆகவே, இனி நீங்கள் **Rev.Dr.தியோடர் வில்லியம்ஸ்** அவர்கள் எழுதிய **திரித்துவத்தைப்பற்றிய** ஆராய்ச்சி கட்டுரையை கவனமாக வாசியுங்கள். ஆவியானவரே உங்களுக்கு நம் ஆண்டவரின் திரியோக தத்துவத்தை விளங்கவைப்பார். ஆமென்.

**Rev.Dr.தியோடர் வில்லியம்ஸ்** அவர்கள் எழுதிய திரித்துவ கட்டுரையை அடுத்தப்பக்கத்தில் நீங்கள் தொடர்ந்து வாசிக்கலாம்.



# திரித்துவம்

**Dr.Rev.தியோடர்வில்லியம்ஸ்**

பல தெய்வவழிபாடு மிக்க சூழ்நிலையில் பழைய ஏற்பாட்டாகமங்கள் இயற்றப்பட்டமையால் அவை **பன்முறை** கடவுளின் ஏகத்துவமாகிய ஒருமையை அழுத்திக்கூறுகின்றன. எனினும் பழைய ஏற்பாட்டிலும் **திரித்துவக்கொள்கை** ஆங்காங்கு நிழலாட்டமாய்க் காணப்படுகிறதை அறியலாம். எடுத்துக்காட்டாக, **"நமது சாயலின்படி நமக்கொப்பாக மனிதனை உண்டாக்குவோமாக"** என்று கடவுள் கூறியதை கவனிக்கவும். (ஆதி 1:29). "இப்பொழுது கர்த்தராகிய ஆண்டவர் என்னையும் தமது ஆவியையும் அனுப்புகிறார்" என்று **மேசியா** கூறியதாக ஏசாயா 48:16ல் கூறினார். நற்செய்தி நூல்கள் நான்கிலும் இயேசுகிறிஸ்து அடிக்கடி தம்முடைய **தந்தையாக பிதாவை** குறிப்பிட்டுப் பேசினார். சிலவேளைகளில் தாமே பரிசுத்த ஆவியானவரை அனுப்பப்போவதாகவும் வாக்களித்ததுண்டு.

இந்த உபதேசம் நமது அற்பபுத்திக்கு விளங்கக்கூடியதன்று, ஆகவே இதை மறுக்கும் வேதபுரட்டர் அநேகர் காலாகாலத்தில் தோன்றித்தவறான கொள்கைகளைப் பிறப்பித்துள்ளார் கள். ஒரு சிலர் கடவுளின் ஏகத்துவத்தை மிஞ்சி மிகைப்படுத்தி வற்புறுத்திப்போதித்தமையால் **இயேசு கிறிஸ்துவை** மெய்த்தேவனாகவும், **பரிசுத்தாவியானவரைத்** தெய்வீக ஆளாகவும் ஒப்புக்கொள்ள மறுத்தனர். ஆனால் நாம் நம் மூளையினால் கிரகித்துக்கொள்ளக்கூடிய உண்மைகளை மட்டும் ஒப்புக்கொள்வது கிறிஸ்தவ இலட்சணமன்று, வேதாகமம் கூறுவதையெல்லாம் நாம் நம்பவேண்டும்.

வேறு சிலர் **மும்மூர்த்திகளுக்கு** ஒப்பாகத் **திரித்துவத்தை** பொருள்படுத்தித் **தந்தையையும், குமாரனையும், பரிசுத்தஆவியானவரையும்** மூன்று **தேவர்களெனக்** கருதி வழிப்படுகிறதாகத் தெரிகிறது. இதுவும் முற்றிலும் தவறு. ஒன்றுக்கொன்று எதிரிடையாய் நிற்கும் இவ்விரண்டு **புரட்டுகளுக்கும்** நாம் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். இந்தச் சிக்கலான கொள்கை இறையியலின் நுண்ணிய கருத்துக்களை உற்றாராய்ந்து கற்றறிந்த நிபுணர்களுக்கேயல்லாமல் பொதுமக்கள் அறிய முயற்சிப்பது சரியல்ல என்று நாம் எண்ணலாகாது. **பிதா,குமாரன், பரிசுத்த ஆவியானவரை** ஏக கடவுளாக உலக மக்களை இரட்சிப்பது எப்படி என்பதை நாம் எல்லாரும் அவசியமாய் அறியவேண்டும்.

**திரித்துவக்கொள்கையில் அடங்கியுள்ள சத்தியங்களை நாம் காண்போம்:**

**1. கடவுள் ஒருவரே: அவர் பிரிக்கக்கூடாதவர்,**

**2.** மேற்கண்ட **பிரிக்கமுடியாத** தேவதன்மை முழுவதும் **பிதா,குமாரன்,பரிசுத்த ஆவி** ஆகிய மூவரில் **ஒவ்வொருவருக்கும்** உண்டு. இம்மூவராகிய ஒவ்வொருவரும் மாறாத்தன்மையையும், சர்வ வல்லமையையும் அழிவில்லாத நித்தியத்துவத்தையும் உடையவர் ஆகும்.

**3.** மேற்கண்ட **மூவரில்** ஒவ்வொருவருக்கும் மற்ற **இருவரிடத்தில்** காணப்படாத விசேஷித்த ஆற்றல்களும் இலட்சணங்களும் உண்டு. இம்மூவருக்குள்ளும் காணும் **வெவ்வேறு இலட்சணங்கள் ஆள்தத்துவக்குரிய** தனி சிறப்புகளாகும்.

**4.** மேற்கண்ட மூவரில் ஒவ்வொருவரும் கடவுளின் ஒவ்வொரு பாகமாயிருந்தாலும் **கடவுள் மூவராய்ப் பிரிந்திருக்கவில்லை.** தேவதன்மை **ஒன்றாயிருப்பதாலும்,** தேவனுடைய பண்புகள் யாவும் அந்தத் தன்மையில் **அடங்கியிருப்பதாலும்** இம்மூவரில் ஒவ்வொருவருக்கும் தேவ தத்துவங்கள், குணங்கள் யாவும் **பொதுவானதாகும்.**

**5. மூவருக்குள்** காணப்படும் ஆள்தத்துவத்தின் தனிச்சிறப்பும் வேற்றுமைகளும் காலவட்டத்தில் உண்டானவையல்ல, கடவுளது அனாதி இருப்பில் எப்பொழுதும் இருந்து கொண்டேயிருந்தவைகள். கடவுள் **செயலாற்றியபோதுதான்** இந்த ஆள்தத்துவத்திற்குரிய **வேற்றுமைகள்** உண்டாயின என்று கூறுவது தவறு. கடவுள் எப்பொழுதும் **பிதா,குமாரன்,பரிசுத்த ஆவியானவர் மூவராயிருந்தார்.** இருந்துக்கொண்டே வருகிறார், இருக்கத்தான் போகிறார்.

**திரித்துவத்தின் அடக்கம் இப்படியிருக்க, இதை நிலைநாட்டப் பின்வரும் நான்கு கருத்துரைகளை மெய்யெனக்காட்டல் வேண்டும்.**

**1. கடவுள் ஒரே ஒருவர்.**

**2. நசரேயனாகிய இயேசு மெய்க்கடவுள்,அதேசமயத்தில் அவர் பிதாவுக்கு வேறுபட்டவர்.**

**3.ஆவியானவர் மெய்க்கடவுள்,அதேசமயத்தில் அவர் பிதாவுக்கும், குமாரனுக்கும் வேறுபட்டவர்.**

**4. மேற்கண்ட மூவரும் ஒரே கடவுள்.**

1. **கடவுள் ஒருவர்** என்ற உண்மையை நாம் ஆதியாகமம் 2ஆம் அத்தியாயம் 2ம் பத்தியில் உறுதிப்படுத்தி காட்டினோம்.

2. **இயேசு மெய்க்கடவுளாயிருக்கிறார்** என்பதை மறுக்கும் பல பொய்க்கதைகள் தோன்றியிருக்கின்றன. கி.பி.325ம் ஆண்டில் **ஆரியஸ்** என்னும் ஒரு வேதப்புரட்டன் தோன்றிக் கிறிஸ்து பிதாவினால் உண்டாக்கப்பட்டவர் என்றும் அவர் இல்லாத காலம் ஒன்று இருந்ததென்றும் கூறினான். இயேசு தெய்வத்தன்மை போன்ற தன்மையுள்ளவர்: எனினும் அவர் **பிதாவுக்குச் சமமல்ல, அவர் கடவுள் அல்லர்** எனச் சாதித்தான்.

**யேகோவாவின் சாட்சிகள்**(Jehovah's Witnessess), **ஏழாம்நாள் சபையார்**(Seventh Day Adventists) இதைப்போன்ற வேதத்துக்குப் புறம்பான கொள்கைகளை நிலைநாட்டப் பார்க்கிறார்கள். ஆனால் திருச்சபைக்குப் புறம்பேயுள்ள சமயக்கட்சிகளின் வேத விரோதக் கருத்துக்களைப் பார்க்கிலும் உள் சபையாரின் குரு துரோகமே பயங்கரமானது. கிறிஸ்தவ **இறையியல் கல்லூரிகளில்** பட்டம் பெற்றுத் திருச்சபைகளில் நுழைந்து கிறிஸ்துவின் முழு தெய்வீகத்தை மறுக்கும் குருமாருக்கு(ஆயர்களுக்கு) எச்சரிக்கையாயிருப்போமாக? கிறிஸ்துவைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவர் யாருடைய குமாரன்? (மத் 22:42) என்ற கேள்வியே தக்க உரைகல்.

**அ.** கிறிஸ்து பெத்லகேமில் பிறவாததற்கு முன் இருந்தார். **ஆபிரகாம் உண்டாகிறதற்கு** முன்னமே நான் இருக்கிறேன்.(யோ 8:58) என்று இயேசு கூறியபோது இருக்கிறவராகவே இருக்கிறேன் என்கிற கருத்துக்கொண்ட **யேகோவா என்னும்** திருநாமத்தைத் தமக்கு எடுத்துக்கொண்டார். **"அவர் ஆதியில் கடவுளோடிருந்தார்"** (யோவான் 1:2) "சகலமும் **அவர் மூலமாய் உண்டாயிற்று"** (யோவான் 1:3) "அவர் பரலேகத்திலிருந்து இறங்கி வந்ததாகக் கூறியிருக்கிறது" (யோவான் 3:13,31, 13:3, 16:28, பிலி 2:6-11).

**ஆ.** "கிறிஸ்து காணப்படாத கடவுளின் **தற்சொரூபம்** அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது" (கொலோ 1:16). அவர் கடவுளின் சாயல்(2கொரி 4:4). இவர் (கிறிஸ்து) யெகோவாவினுடைய மகிமையின் பிரகாசமும், அவர் தத்துவத்தின் சொரூபமுமாயிருக்கிறார்(எபி 1:3).

**இ.** கடவுளுக்கேயல்லாமல் வேறொருவருக்கும் பொருந்தாத சில **பெயர்களும் பட்டங்களும்** இயேசுகிறிஸ்துவுக்குரியன எனதிருமறையில் வாசிக்கிறோம்.(யோவான் 1:1,20:28,அப் 20:28, ரோம 9:15).

**ஈ.** கடவுளேயல்லாமல் வேறொருவரும் செய்ய இயலாத கிரியைகளைக் குமாரனாகிய இயேசு கிறிஸ்து செய்ததாகத்திருமறை கூறுகிறது. பொதுவாக, பிதா எவைகளைச் செய்கிறாரோ அவைகளைத் **தாமும் அப்படியே செய்து வருகிறதாக இயேசு** உரிமை பாராட்டினார்(யோவான் 5:19). பாவங்களை மன்னிக்கவும், **மரித்தோரை** உயிர்ப்பிக்கவும், **மக்களை** இரட்சிக்கவும், உலகத்தை நியாயந்தீர்க்கவும் போன்ற காரியங்கள் கடவுளுக்கே உரிமையுள்ளது. இயேசு கிறிஸ்து பாவங்களை **மன்னித்தார்** (மாற்கு 2:10). மரித்தோரை **உயிர்ப்பித்தார்**(யோவான் 5:21), சர்வத்தையும் **சிருஷ்டித்தார்**(யோவான் 1:3, கொலோ 1:15-17,எபி 1:2),சகல ஜாதிகளையும் **நியாயம் விசாரித்துத்தீர்ப்பிடுவார்**(யோவான் 5:22,மத் 25:31,32,2கொரி 5:10).

**உ.** கடவுளுக்கே உரித்தாகும் பண்புகள் யாவும் இயேசுவுக்குரியன என்று வேதாகமம் கூறுகிறது. **மாறாமை** ஒரு தெய்வீக பண்பு. ஆகவே இயேசுகிறிஸ்துவும் **நேற்றும்,இன்றும், என்றும்** மாறாதவர் என்று அழைக்கப்படுகிறார்(எபி 1:11,12,13:18). **எங்கும் வியாபித்திருக்கும் உரிமை கடவுளுக்கே, இரண்டு பேராவது மூன்று பேராவது** என் நாமத்திலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவில் இருக்கிறேன் என்று இயேசுதாமே உரிமை உணர்வுடன் வாக்களித்தார்.(மத் 18:20,28:20).

**ஊ.** கடவுளுக்குறிய மகிமையை **இயேசுகிறிஸ்துவுக்கும்** அளிக்கப்பட்டாயிற்று. கடவுளுக்குரிய மகிமையை **வேறோருவருக்கும் கொடுக்கக்கூடாது** என வேதாகமம் வற்புறுத்திக் கண்டிப்பாய்க் கூறியும்(ஏசாயா 42:8,45:22 23,48:11).அதே மகிமை **கிறிஸ்துவுக்குமுரியது** என்று கண்கூடாகக் காட்டுகிறது.

திருச்சபையில் ஆசீர்வாதம் கூறும்போதெல்லாம் **ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையும், கடவுளின் அன்பும்,பரிசுத்த ஆவியயினுடைய ஐக்கியமும் உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக** என்று கூறுவதின்மூலம் சமமாகக் கனம் பண்ணுகிறவர் களாவோம்(2கொரி 13:14). விசுவாசிகளுக்கு நாம் **ஞானஸ்நானம்** கொடுக்கும்போதும் **பிதா,குமாரன்,பரிசுத்த ஆவியின் நாமத்தினால்** எனக்கூறுவது வழக்கம்(மத் 28:19) கிறிஸ்துவைக்கனம் பண்ணுவது **பிதாவையும்** கனம் பண்ணுவதாகும். **குமாரனைக்** கனம்பண்ணாதவன் அவரை அனுப்பின **பிதாவையும்** கனம் பண்ணாதவனே என்று (யோவ 5:23)ல் எழுதப்பட்டுள்ளது.

**எ.** கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறு அவருடைய **தெய்வீகத்திற்கு** சாட்சியாகும். அவர் **தம்மையே மேசியா** என்று கூறினார்(யோ 4:26) பேதுரு,பர்னபா,பவுல் அப்போஸ்தலர்கள் மக்களது வணக்கத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் சீஷர்கள் காலில் விழுந்து வணங்கியபோது எழுந்திரும்,நானும் **ஒரு மனிதன்தான்** என்று சொல்லி அவனைத்தூக்கி நிறுத்தினார்கள்..(அப் 10:29). தேவதூதர்கள்கூட மக்கள் தங்கள் கால்களில் விழுந்தவர்களை **அதட்டி, வேண்டாம், வேண்டாம்.... நானும் ஓர் ஊழியக்காரன்,கடவுளையே வணங்கு**

என்றார்கள்.(வெளி 19:10, 22:8), இயேசுவோ (மத் 28:17,மாற்கு 1:40, யோவான் 9:38) தமது காலில் விழுந்து பணிந்து கொண்டவர்களைத் **தடைசெய்யாது**, அவர்களுடைய **வணக்கத்தை** ஏற்றுக்கொண்டார்.

இயேசுகிறிஸ்து தமது உபதேசத்திற்குத் தம்மையே ஆதாரமாகக்கொண்டு போதித்தார். **வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிற மக்களைக் கடவுளிடத்திற்குப்போகும்படி சொல்லாமல் தம்மிடத்தில் வரவழைத்தார்**(மத் 11:28) தம்மைப் பின்பற்றுகிற மக்கள், எல்லாவற்றையும், அதோடு பெற்றோரையும் வெறுத்துத் **தம்மைப் பின்பற்றவேண்டுமென்று** அழைப்பு விடுவித்தார். **கடவுளல்லாத ஒரு மனிதன்** இவ்வாறு பேசத் துணியமாட்டான். தம்மையே நடுநாயகராகத் காட்டினவர் கடவுளாயிருக்க வேண்டும்.

**பிதா,என்னிலும் பெரியவர்**,(யோ 14:28)என்ற வசனத்தைக்குறிப்பிட்டு வேதக் கருத்துக்களை மாற்றுபவர்கள் தங்கள் தவறான கொள்கைகளுக்கு ஆதாரமாகக் இந்த வசனத்தை காட்டுவதுண்டு, ஆனால், உள்ளபடி இந்த வாக்கியம் **கிறிஸ்துவின் தெய்வீகத்திற்கு** ஒரு பலத்த சாட்சியாகும். ஒரு வகையில் **பிதாவுக்கு நிகரானவரும்(தெய்வீக** துறையில்) இன்னொரு வகையில் பிதாவுக்கு கீழ்ப்பட்டவருமான (மனுஷீக துறையில்)கிறிஸ்து, **பிதா** என்னிலும் **பெரியவர்** எனக்கூறுவது கருத்து நிறைந்ததாகும். எந்த வகையிலும் பிதாவுக்கு நிகராகாத ஒரு வெறும் மனிதன் பிதா என்னிலும் பெரியவர் எனக்கூறுவது அர்த்தமில்லாத மூடத்தனமாகும்.

இயேசுகிறிஸ்துவின் **தெய்வீகத்தன்மைக்கு** வேதாகமமே போதிய அத்தாட்சியும் ஆதாரமுமாயிருந்தும், திருச்சபையின் அனுபவம் ஒரு பலத்த துணை நியாயமாகும். ஆதி சபை முதற்கொண்டு இருபது நூற்றாண்டுகளாய்க் கிறிஸ்தவர்கள் பெரும்பாலோர் இயேசுவைக் கடவுளாகக் கருதி வணங்கி வருகிறார்கள். ஆதிச்சபையார் ஏகத்துவவாதிகளான **யூத சமய** வெறியர், தர்சு **சவுலைப்போல** நாசரேத்தூர் தச்சரும், குருசில் தூக்கப்பட்டவருமாகிய இயேசுவை **மேசியாவாக** ஒப்புக்கொள்ள மனமற்றிருந்தார்கள் என்றாலும் மூடக்கொள்கையுள்ள இந்த **ஏகத்துவவாதிகள்** முதலாய் **இயேசுவின் காலில் விழுந்து** அவரைக் கடவுளின் குமாரனென்றும், மெய்த்தேவனென்றும் வணங்கினார்கள். மெய்யான ஒரே கடவுளாகிய உம்மையும், நீர் அனுப்பினவராகிய **இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்**(யோ 17:3) என்று எழுதப்பட்டுள்ளது.

**நானும்,பிதாவும் ஒன்றே** (யோவான் 10:30) எனச் சாதித்தவர் மேற்படி யோவான் 17:3ல் தம்மைப் பிதாவுக்கு **வேறுபட்டவராகக்காட்டினார்**. கணவன்,மனைவி சிந்தையிலும், நோக்கத்திலும், வாழ்க்கையிலும் ஒன்றாயிருந்தும் ஒருவருக்கொருவர் வேறுபட்ட தனி ஆட்களாயிருக்கிறார்கள் என்பது மேற்படி திருமறைப்பொருளுக்கு நிழலாட்டமான ஓர் எடுத்துக்காட்டாகும்.

தன்மையிலும், தத்துவப் பண்புகளிலும், சிந்தையிலும், **பிதாவும்,குமாரனும் ஒருவரே,** மனிதனாக,மனுகோலம் எடுத்தபோது ஆள்தத்துவத்தில் இருவராக காணப்படுகிறார், பிதா **அவரை அனுப்பினார்**. பிதாவினிடம் **கட்டளை பெற்றார்**(யோ 12:49). **பிதாவின் சித்தத்தைச்** செய்ய வந்தார். **குமாரன்** பிதாவினிடத்தில் அன்பு கூர்ந்தார். **பிதாவை நோக்கி** ஜெபித்தார்(யோவான் 17). பிதாவை **நீர்** என்றும் **அவர்** என்றும் அழைத்தார். இருமுறை பிதாவானவரே அசரீரி வாக்காய் **இவர் என் நேச குமாரன்** என்று இயேசுவை அறிமுகப்படுத்தினார்.

ஆகவே, பூமியில் நசரேயனாகிய **இயேசு மெய்யான மனிதனாயும்,** அதே சமயத்தில் அவர் **மெய்க்கடவுளாயுமிருந்தார்.** இந்த சந்தர்ப்பத்தில் மட்டும் பிதாவுக்கு வேறுபட்டவராக காண்கிறோம்..

# திரித்துவம்

பிதாவையும், குமாரனாகிய **கிறிஸ்துவையும்** பற்றி நாம் ஆராய்ச்சி செய்து அத்துடன் நின்றுபோனால் நமது கிறிஸ்தவ அனுபவம் மிகவும் குறைவாகவேயிருக்கும். **பரிசுத்த ஆவியானவரையும் ஓர் ஆள்** என்றும் ஒரு **தெய்வீக ஆள்** என்றும் நாம் ஒப்புக்கொண்டு அறிவதே திருமறை உபதேசத்துக்கும் **கிறிஸ்தவ அனுபவத்திற்கும் பொருந்தும். பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வல்லமை** எனக்கூறுவது போதாது. அவர் **வல்லமை வாய்ந்த கடவுளாகவேயிருக்கிறார்.** பரிசுத்த ஆவியானவர் **கடவுளது மூச்சு எனக்கூறுவது போதாது.** அவர்தாமே மனிதருக்குள் தமது சுவாசத்தை நாசியிலே ஊதுகிற கடவுள். சில ஏழாம் நாள் சபையாரும் இன்னும் சில வேதவசனங்களுக்கு **தவறான விளக்கமளிப்பவர்களும் பரிசுத்த ஆவியானவருக்கு** ஆள்தத்துவமில்லை எனச் சாதிப்பார்.

எபேசுவில் பவுல் சந்தித்த பன்னிரண்டு பேர் பரிசுத்த ஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவேயில்லை(அப் 19:2) என்று சொன்னதுபோல இன்றுள்ள கிறிஸ்தவ சபைகளிலும் ஏராளமானவர்கள் இவ்விதமாய்க்கூறும் நிலையில்தான் இருக்கின்றனர். பரிசுத்த ஆவியானவர் ஓர் ஆள் என்பதைக்குறிக்கும் புதிய ஏற்பாட்டு வாக்கியங்களைக் கவனிப்போம். ஆவியானவருக்கு **அறிவு உண்டு.**(1கொரி 2:10,11, எபே 4:30) அவருக்குச் **சித்தமுண்டு** (1கொரி 12:11) அவர் **துக்கப்படக்கூடியவர்**(எபே 4:30). அந்தியோகியா **சபை மூப்பன்மாரோடு** பேசினார்(அப் 13:2).

**முதல் மிஷனரிமார்களை** அனுப்பினார்(அப் 13:4) தம்மால் அனுப்பப்பட்ட அந்த ஆதிகாலத்துப் **பிரசங்கிமாரை** அவர் நடத்தினார்.(அப் 16:6,7) அப்போஸ்தலர் நடபடிகள் என்ற ஆகமத்தைப் **பரிசுத்த ஆவியானவரின் நடபடிகள்** எனக்கூறினாலும் தவறாகாது. இவ்வாகமத்தின் ஒவ்வொரு ஏட்டிலும் **பரிசுத்த ஆவியானவர் செய்துவருகிற கிரியைகளை நாம்** காண்கிறோம். **அறிவு, சித்தம், ஆள்தத்துவம்** இவைகளைப் படைத்திருப்பவர் மாத்திரம் செய்யக்கூடிய கிரியைகளைப் பரிசுத்த ஆவியானவர் செய்துகொண்டே வருகிறார்.

நாம் பரிசுத்த ஆவியானவரைக் **கனம் பண்ணவேண்டும்.** பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாய்த் **தூஷணம் சொல்பவன்** என்றென்றைக்கும் மன்னிப்படையாமல் நித்திய ஆக்கினைக்குள்ளாவான் (மத் 12:31,32, மாற் 3:28,29)அவருக்குத் **"தேற்றரவாளன்"** என்றும் **"சகாயர்"** என்றும் வேறு பெயர்கள் சூட்டப்பட்டன. அவரைக் குறிக்கும்படி உயர்திணைப் பெயர்ச்சொற்களும், உரிச்சொற்களும் வழங்கப்படுகின்றன. **"எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து நினைப்பூட்டுவார்"**(யோவ 14:26),"உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்"(16:8) "உங்களை நடத்துவார்"(16:13). ஆகவே அவர் வெறும் காற்று அல்ல, தெய்வீக மூச்சு அல்ல, **பரவசப்பேச்சு** தான் பரிசுத்த ஆவியானவர் என்று கருதக்கூடிய நிலைக்கு ஒரு சிலர் வந்துள்ளதாகத்தெரிகிறது. **பரிசுத்த ஆவியானவர் வேறே: ஆவியானவரின் வரங்கள் வேறே.** வரங்கள் பலவுண்டு, ஆனால் அவைகளை அளிக்கும் ஆவியானவர் ஒருவரே.

**ஆள்தத்துவம்** படைத்த பரிசுத்த ஆவியானவர் **கடவுளாயிருக்கிறார். பிதா,குமாரன்,** எப்படி கடவுளாயிருக்கிறார்களோ, அதே அளவுக்குச் சரியாய் **பரிசுத்த ஆவியானவரும்** கடவுளாயிருக்கிறார். அவருக்கு அறிவு உண்டு என்று கண்டோம். அவருக்கிருக்கும் அறிவு கடவுளின் ஆழங்களையும் ஆராயக்கூடிய(2கொரி 2:9-13). **சகல சத்தியத்திற்குள்ளும் சீடர்களை** நடத்தக்கூடிய **ஓர் அறிவு**(யோவ 16:13). இந்த **அற்புத அறிவு** கடவுளுக்கேயல்லாமல் வேறொருவருக்கும் இருக்காது. அவருக்கு **வல்லமையுண்டு** என்றறிந்தோம். அவருக்கிருக்கும் **வல்லமை** அற்புதங்களை நடப்பிக்கக்கூடிய வல்லமை(1கொரி 12:4-12) மீறுதல்களினாலும் பாவங்களினாலும் செத்துக்கிடக்கும் மக்களை மீண்டும் பிறப்பிக்கக்கூடிய வல்லமை(யோ 3:5, தீத்து 3:5). அசுத்தமான மக்களைப் **பரிசுத்தமாக்கக்கூடிய வல்லமை**(2தெச 2:13, 1பேதுரு 1:2) **சாவுக்குரிய நமது சரீரங்களை** உயிர்ப்பிக்கக்கூடிய வல்லமை(ரோம 8:11). இவ்வாறான சர்வவல்லமை கடவுளுக்கேயுரியது. எல்லாம் வல்ல **பரிசுத்தஆவியானவர்** உலகெங்கும் உள்ள மக்களிடையே தமது கிரியைகளை நடப்பித்து வருகிறார்(சங் 139:7,1கொரி 12:13). பரிசுத்த ஆவியானவர் எங்கும் **நிறைந்துள்ள கடவுளாவார்,** மேற்சொல்லிய இந்தப் **பரிசுத்த ஆவியானவரே பரிசுத்த மனிதரை** ஏவி, **பரிசுத்த வேத எழுத்துக்களை** எழுதுவித்தார்(1பேது 1:21) அவைகள் தேவ ஏவுதலினால் அருளப்பட்டவை யாகும்.(2தீமோ 3:16). பரிசுத்த ஆவியானவராகிய கடவுளே தாம் தெரிந்து பயிற்றுவித்த **மனிதரைப் பயன்படுத்தி ஏவி அவர்களைக் கொண்டு திருமறை எழுத்துக்களை அருளினார்.**

கடவுளாயிருக்கிற இந்தப் **பரிசுத்த ஆவியானவர்** பிதாவுக்கும் குமாரனுக்கும் வேறுபட்டவர் என்றும் அறியவேண்டும். பிதா அவரைச் சகாயராக அனுப்பித் தந்தருளினார்(யோவான் 14:16,26). இயேசுகிறிஸ்து உயிர்தெழுந்து பரத்துக்கேறினபிறகு உலகத்தில் தாம் விட்டு வந்தவர்களுக்கு ஆறுதல் அளிக்க பரிசுத்தஆவியானவரைத்தான் இயேசு அனுப்பினார் (யோவான் 15:26). கிறிஸ்தவ ஆராதனையின் இறுதியில் கூறும் ஆசீர்வாத ஜெபத்திலும்,ஞானஸ்நான அறிக்கையிலும் அவர் வேறுபட்டவராய்க் குறிப்பிடப்பட்டார்(மத் 28:19,2 கொரி 13:14). இயேசுகிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றபோது பிதாவானவர் பரலோகத்திலிருந்து அசரீரி வாக்காய்ப்பேசவே பரிசுத்த ஆவியானவர் புறா ரூபங்கொண்டு இயேசுவின்மேல் இறங்கிக் இயேசுதண்ணீரை விட்டுக்கரையேறியபோது இயேசுவின் பேரில் வந்து அமர்ந்தார்(மத் 3:16,17).

கடைசியான **பரிசுத்த ஆவியானவருக்குத் தனி வேலையுண்டு.** அனாதி காலத்திலும் எண்ணிறந்த மக்களைத்தெரிந்து, அவர்களில் அன்புக்கொண்ட பிதா நமக்கு எட்டாத் தூரத்தில் இருக்கிறவராகவே இருக்கலாம். மனிதரில் மனிதராய் நமது மத்தியில் பிறந்து வாசஞ்செய்த இயேசுகிறிஸ்துகூட நமக்குத் தூரமானவராகக் காணப்படலாம். அவர் வந்து இரண்டாயிரம் ஆண்டுகளாயின, அல்லவோ? அவர் நம்மைவிட்டுப் பிரிந்து **பரலோகம்** போய்விட்டார். அல்லவோ? மேற்சொல்லியவாறு நமக்குச் சற்றுத் தொலைவாகத் தோன்றும் பிதாவையும், குமாரனையும் நமக்குப் பக்கமாகக்கொண்டு வந்து காட்டி மகிமைப்படுத்துவது பரிசுத்த ஆவியானவரின் செயல் ஆகும். அவர் நமது உள்ளங்களில் செயலாற்றிப் பாவத்தை நமக்கு உணர்த்தி(யோ 16:8-11). **கடவுள் தெரிந்துகொண்டவர்களை மறுபடியும் பிறப்பித்து,** அவர்களுக்கு அருளூட்டிப் பரிசுத்தப்படுத்தி அவர்களை இயேசுவின் சாயலாக மாறும்படி செய்கிறவர் பரிசுத்த ஆவியானவரே!.

திருமறை எழுத்துக்களையும், பதங்களையும் **எழுதுவித்தவர் அவரே,** நமக்குள் வாசஞ்செய்து தாம் எழுதுவித்த மறைபொருளை நமக்கு விளங்கச்செய்து வருபவரும் அவரேயாவார்.ஆகவே, **பரிசுத்த ஆவியானவர்** ஆள்பண்பு படைத்தவரும்,மெய்க்கடவுளாக வுமிருக்கிறார். அவர் நம் உள்ளங்களில் குடிகொண்டிருந்து நம்மை நாள்தோறும் கிறிஸ்து இயேசுவுக்கு ஒப்பாக மறுரூபப்படுத்தி வருகிறார்.

மற்றொரு வகையில் **கடவுள் ஒருவராயிருக்கிறார்** என்றும் வேதாகமம் கூறுகிறது. **அதே சமயம் அவர் மூவராயிருக்கிறார்** என்றும் வேதாகமம் கூறுகிறது. **மூவருக்கும் கடவுள்** என்று பெயரிட்டு மூவரையும் நாம் வழிப்படக் கடமைப்பட்டவர்களே, பிதாவாகிய **கடவுள்** என்றும்,குமாரனாகிய **கடவுள்** என்றும்,பரிசுத்த ஆவியானவராகிய **கடவுள்** என்றும் கூறுவது மிகவும் சரி ஆகும். எனினும் இந்த மூவரை **மூன்று தேவர்கள்** என்று **அழைப்பதும்,நினைப்பதும்** தவறாகும். இயேசு சீஷராக்கப்பட்ட விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கக் கட்டளையிட்டபோது **பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமங்களிலே** என்று கூறாமல் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரின் **நாமத்தினாலே** ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளை கொடுத்தார்.

மேற்படி **திரித்துவ உபதேசம் இரட்சிப்புக்கு** அவசியமானது. பொதுமக்கள் யாவரும் இந்தக் கருகலான உபதேசத்தில் மிக நுட்பமான விவரங்களையெல்லாம் உற்றாராய்ந்து அறிய வேண்டுமென்பது கருத்தல்ல.

எனினும் உண்மையான விசுவாசிகள் தாங்கள் பிதாவின் அனாதி அன்பினாலும்,குமாரனாகிய **இயேசுகிறிஸ்துவின் திருகரத்தினாலும் பரிசுத்த ஆவியின் வல்ல** செயலாலும் இரட்சிக்கப்பட்டாயிற்று என்று அறியவேண்டும்.இந்த **மூவகை** அறிவும், இந்த **மூவகை** அனுபவமும் இன்றியமையாத அவசியம். பிதாவின் அனாதி அன்பை உணராதவன் கிறிஸ்தவனல்ல,

**"நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்"** என்று சொல்ல இயலாதவன் கிறிஸ்தவனல்ல,பரிசுத்தஆவியானவர் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு தனக்குள் வேண்டுதல் செய்கிறார் என்று உணர்ந்து அனுபவிக்காதவன் கிறிஸ்தவனல்ல. **திரித்துவம் இரட்சிப்புக்கும்,கடவுளை அறிகிற அறிவுக்கும் நமது பரிசுத்த கிறிஸ்தவ** ஜீவியத்திற்கும் அவசியமாயிருக்கிறதென்பது தெளிவு.

கடவுள் அன்பாயிருக்கிறார் என்ற சத்தியத்தை விளங்கச்செய்வது இந்த **திரித்துவக் கொள்கையே.** இன்று அன்பாயிருக்கிற கடவுள் என்றுமே அன்பாயிருந்திருக்க வேண்டும். மக்கள், தேவதுாதர்கள் முதலிய படைப்புகள் இல்லாததற்கு முன்பே அவர் எப்படி அன்பாயிருக்க முடிந்தது? யாரிடம் அன்பு கூர்ந்திருப்பார்? நாம் வழிபடுகிற கடவுள் நித்தியமாய் ஏகவாசம் செய்து தம்மை மட்டும் நினைக்கும் ஓர் ஏகனல்ல.

**ஏகத்துவத்தில்** ஒன்றாயிருந்த மூவர் ஒருவரிடத்தில் ஒருவர் அனாதி காலத்தில் அன்பாயிருந்தனர். புத்திர பாக்கியமில்லா இல்லத்தில் கணவன்,மனைவி ஒருவரில் ஒருவர் எப்படி அன்பாயிருக்கிறார்களோ?, அப்படியே உலகம் உண்டாவதற்கு முன் மேற்சொல்லிய **மூவருக்குள்ளும் நிகரற்ற அன்பும்,ஏக ஐக்கிய நட்பும்** இருந்தது.

குமாரன் நித்தம் பிதாவுக்கு மனமகிழ்ச்சியாயிருந்தார். **அநாதி காலம் முதல்** எப்பொழுதும் அவர் சமூகத்தில் களிகூர்ந்தார்(நீதி 8:30) கடவுள், **தன்மையில் ஒருவர்,** ஆள்தத்துவத்தில் **மூவராயிருக்கிறார்** எனக்கூறுவது மெய்யான வேத உபதேசமாகும்.

# திரித்துவம்

இந்த மறைப்பொருளைப்பற்றிய **வேத உபதேசம்** என்ன என்று ஆராய்ச்சி செய்து முடித்தோம். எனனினும் இது சம்பந்தமாகத் தோன்றிய சில தவறான கொள்கைகளையும் நாம் கவனிப்பது நலம். **கள்ள உபதேசங்கள் மூவகைப்படும்.**

**கள்ள உபதேசம் 1.** கிறிஸ்துவுக்குப்பின்னர் ஆரம்ப நூற்றாண்டுகளில் விக்கிரக வணக்கத்தாரின் இடையே வசித்து வந்த கிறிஸ்தவர்கள், பல தெய்வ வணக்கத்தை எதிர்க்கத் தெய்வீக ஏகத்துவத்தை மிஞ்சி வற்புறுத்திப் போதித்தனர். அவ்வாறு போதித்ததின் விளைவாகக் கடவுள் தன்மையில் மட்டுமல்ல, **ஆள்தத்துவத்திலும் ஒருவர்: பிதா,குமாரன்,பரிசுத்தாவி** கடவுளது மூன்று பணிகளைக் குறிக்குமேயல்லாது மூன்று ஆள்களைக் காட்டுகிறதில்லை, கடவுள் சில பணிகளை ஆற்றுகிறபோது **பிதா** என்றும், இன்னும் **வேறெ அலுவல்களை** வகிக்கவே பரிசுத்த ஆவியானவர் என்றும் அழைக்கப்படுவார். கடவுள் சிலவேளைகளில் தம்மைப் பிதாவாகவும், சில வேளைகளில் குமாரனாகவும்,வேறே சிலவேளைகளில் ஆவியானவராகவும் வெளிப்படுத்திச் சித்தங்கொண்டார். அவர் எப்பொழுதும் **பிதா,குமாரன், பரிசுத்த ஆவியானவர்** என்ற ஒரு திரியேக கடவுள் அல்லர், மூவாள்களை ஒரே தெய்வத்தின் **மும்முகங்களாக** நினைப்பார்கள். மூன்று நாமங்கள் ஒரே தெய்வீக பொருளின் பற்பல தோற்றங்களைக் குறிக்கின்றன என்ற பிழையான கொள்கை பரவிற்று.

**பதில்:** மேற்படி கருத்து மிகத்தவறானது. ஒரே கடவுள் எப்பொழுதும் மூவராகவேயிருந்தார். எப்பொழுதும் **மூவராயிருந்திருக்கவேண்டும்** என்று வேதாகமம் தெளிவுப்படுத்திப் போதிக்கிறது.

**கள்ள உபதேசம் 2:** மேற்சொல்லிய தப்பெண்ணத்தை நிராகரிக்க **இன்னொரு வகையார்** திரித்துவத்தை ஆள்களின் வேற்றுமைகளை மிதமிஞ்சி வற்புறுத்தியதால், திரித்துவத்தின் ஒருமைப்பாட்டைப் பிரித்துவிட்டார்கள்.

**"குமாரன் தேவனாயிருந்தும் பிதாவிலும் சிறியவர்"** என்று போதித்தனர். இந்த போதனைக்கு ஆதாரமாகத் தோன்றும் சில வாக்கியங்கள் வேதாகமத்தில் உண்டு அவைகளாவன (யோவான் 5:19,8:28,14:28).

குமாரன்தாமே மனப்பூர்வமாய் நடுவர் பணிக்கென தெரிந்துகொண்ட தாழ்ந்த நிலையை இந்தவாக்கியங்கள் குறிக்கும். அவை திரித்துவத்தின் இரண்டாம் ஆளுடைய அநாதிநிலையைக்குறிக்கும் வாக்கியங்கள் அல்ல.

முதலாம் ஆள் என்றும், இரண்டாவது ஆள் என்றும், மூன்றாம் ஆள் என்றும் கூறுவது தப்பான எண்ணத்திற்கு ஏதுவாயிருக்கும். இந்த மறைப்பொருளை விளக்க ஓர் எடுத்துக்காட்டு உண்டு. எனினும் எடுத்துக்காட்டு ஒப்பனை, திருஷ்டாந்தம் எவ்வளவு இசைவானாலும் ஒவ்வொரு விவரத்திலும் இசையும் என்று நாம் எதிர்ப்பார்க்கக்கூடாது.

**பதில்:** ஒன்பது கோடி மைல் தூரத்தில் **ஒளி வெப்பம்** நிறைந்த பெரிய உருண்டை இருக்கிறது. அதற்குச் சூரியன் என்று பெயர். ஒளியும், வெப்பமும் இடைவிடாது சூரியனிலிருந்து புறப்பட்டு வருகின்றன. **ஒளியைக்காண்கிறோம், வெப்பத்தை உணருகிறோம்.** ஆகவே, சூரியன் **ஒருவகை திரித்துவம்** எனலாம். **சூரியன், ஒளி, வெப்பம்** என்றும் கூறலாம்.

ஒளியில்லாத காலம் சூரியனுக்கு இல்லை. எனினும் இயல்பாக சூரியனை முதல் ஊற்று என்றும், ஒளி அதினின்று உண்டாகின்ற இரண்டாவது பொருள் என்றும் கூறுவோம். குமாரன் இல்லாத ஒரு காலம் இருந்திருக்காது, நித்தியத்திலும் வல்லமையிலும் குமாரன் பிதாவுக்கு நிகரானவர் என்றாலும், தெய்வத்தின் ஊற்றாகிய பிதாவினின்று அவர் எப்பொழுதும் பிறப்பிக்கப்பட்டு வருகின்றமையால், பிதாவை முதலாம் ஆள் என்றும் குமாரனை இரண்டாம் ஆள் என்றும் கூறுவது தவறல்ல. **சூரியனை நாம் காண இயலாததுபோல** பிதாவையும் நாம் காணமுடியாது.

**"ஒருவரும் சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவர். மனிதர் ஒருவரும் காணாதவர், காணவும் முடியாதவர்...."** (1 தீமோ 6:16). சூரியனிலிருந்து வீசும் **ஒளிக்கதிர்களைக்கொண்டே சூரியன் உண்டு** என்று தெரிந்து ஓரளவில் நாம் பொழுதைக் காணலாம். பிதாவினின்று வந்துகொண்டேயிருக்கிற **அவருடைய குமாரன்** மூலம் நாம் பிதாவை அறியலாம். அவரை ஓரளவாகக் காணமுடியும்.

**"என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்"**(யோ 14:9). சூரியனின் வெப்பத்தை நாம் கண்களால் காணமுடியாது. எனினும் அதை நாம் **உணருகிறோம்.** அதனால் உண்டாகும் நன்மை தீமைகளை நாம் காணமுடியும். அதுபோல **பரிசுத்த ஆவியானவரை** நாம் காணமுடியவிட்டாலும், அவரது வெப்பத்தை நாம் நமது **உள்ளங்களில் உணர்ந்து,** பிறருடைய வாழ்க்கையில் அவரால் உண்டாகும் அதிசய மாறுதல்களை நாம் காணமுடியும்.

**கள்ள உபதேசம் 3:** பிதாவையும், குமாரனையும், **பரிசுத்த ஆவியானவரையும் மூன்று தேவர்கள்** என்றழைப்பது **மூன்றாவது தவறான உபதேசம்** ஆகும். இந்த திரித்துவத்தின் ஏகத்துவத்தை மறுத்துப் பிதா,குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆள்தத்துவத்தில் மட்டுமன்று, தன்மையிலும் மூவராயிருக்கிறார்கள் எனக் கூறுகின்றனர்.

**பதில்: பிதா** எப்பொழுதும் குமாரனுக்குப் பிதாவாயிருப்பார். ஒரே பேறான குமாரன், பெற்றோரால் ஒரேமுறை பிறப்பிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறார். அது ஒரு நித்தியகால நிகழ்ச்சி. **பிதாவுக்கும், குமாரனுக்கும் உள்ள ஐக்கியம் நித்தியமானது.** அத்தன்மைபோலப் **பரிசுத்த ஆவியானவர்** எப்பொழுதும் பிதாவிலும்,குமாரனிலும் இருந்து புறப்பட்டுக்கொண்டே இருக்கிறார். இந்த வேத உபதேசம் நம் அற்பபுத்திக்கு விளங்காததாயினும், நாம் அதன் காரணமாக இதை மறுக்கக்கூடாது. நாம் இதை மறுத்தால் ஒருவேளை நம்மை அறியாமலே **மூன்று தேவர்களை வணங்குபவர்கள்** ஆவோம்.

எடுத்துக்காட்டாக, ஒரு சிறு சதுர பெட்டியைக் கையில் எடுத்துக்கொள்ளவும். அந்தப் பெட்டியின் நீளம் **ஓர் அங்குலம், அதன் அகலம் ஓர் அங்குலம், அதன் உயரம் ஓர் அங்குலம்** என்று வைத்துக் கொள்ளவும். அதாவது இந்தச் சிறுபெட்டி ஒருவகை திரித்துவமாகும். அதுவுமின்றி அந்தத் திரித்துவம் இன்றியமையாததாகும் அல்லவோ? மேற்படி **மூன்றில்** ஏதாவது **ஒன்று இல்லாதுபோனால்** அது பெட்டியாகாது.

ஒரு பெட்டிக்கு **நான்கு அளவுகள்** இருக்கமுடியாது. **இரண்டு அளவுகள் மட்டும்** போதாது. அதுபோல தெய்வீகத் திரித்துவத்தில் மூவர் எப்பொழுதும் இருந்திருக்கவேண்டும். நால்வர் இருக்கமுடியாது. இருவர் மட்டும் இருந்தால் **கடவுளாயிருக்கமாட்டார்.**

அதே சமயத்தில் இன்றியமையாத **மூன்று அளவுகள்** கொண்ட இந்தப்பெட்டி ஒரே பெட்டியாயிருக்கிறது. பெட்டியின் நீளம் பெட்டியின் ஒரு பாகமாயிருக்கிறது என்று நாம் கூறமுடியாது. முழுப்பெட்டியும் அதன் **நீளத்தில் உண்டு. முழுப்பெட்டியும் அதன் அகலத்தில் உண்டு. முழுப்பெட்டியும் அதன் உயரத்திலும் உண்டு.**

அதுபோல கடவுளின் **பரிபூரணம் பிதாவிலும் உண்டு, குமாரனிலும் உண்டு, பரிசுத்த ஆவியானவரிலும் உண்டு.** நீளம் x அகலம் x உயரம் = பரப்பளவு

1 x 1 x 1 = 1

**பிதா x குமாரன் x ஆவி = ஒரே கடவுள்.**

இன்னும் உதாரணமாக, காலத்தைக் கவனித்துக்கொள்வோம். **காலம் ஒன்றே:** அதே சமயத்தில் **இறந்த காலம், நிகழ்காலம்,எதிர்காலம்** என்று மூவகைப்படும். மூன்று காலங்கள் மட்டும் உண்டு. மூன்றுக்கு மேலே காலங்கள் அதிகமாயிருக்க முடியாது. மூன்றுக்குத் குறையவும் இயலாது. ஆகவே, இதுவும் ஒரு **திரித்துவம்** எனலாம்.

**எதிர்காலத்தை** நாம் காணமுடியாது. எதிர்காலத்து இரகசியங்கள் நிகழ்காலத்தில் காணப்பட்டாலொழிய மற்றபடி நமக்குத் தெரியாது, எதிர்காலம் தொடர்ச்சியாய் நிகழ்காலத்தைப் பிறப்பித்துக்கொண்டு தன்னை நிகழ்காலத்திலும், நிகழ்காலத்தைக்கொண்டு வெளிப்படுத்திக் கொண்டே வருகிறது. **அவ்வாறே நாம் பிதாவைக் காணமுடியாது.**

எனினும் பிதாவானவர் பிறப்பித்துக்கொண்டு வருகின்ற குமாரனிலும் **குமாரனைக்கொண்டும்** நாம் பிதாவை அறியலாம். நிகழ்காலம் இறந்த காலமாக மாறுகிறபோது மீண்டும் புலப்படாததாகும். எனினும் இறந்தகாலத்து வரலாறு கற்பிக்கும் பாடங்களைப் படித்து நாம் நிகழ்காலத்தின் பிரச்சனைகளைத் தீர்க்கலாம். எதிர்காலத்தின் சகல பிரச்சனைகளையும் தீர்க்க இறந்தகாலம் நம்மை ஆயத்தப்படுத்தும். **பரிசுத்த ஆவியானவரை நாம் காணமுடியாது.** எனினும் அவர் எப்பொழுதும் குமாரனாகிய கிறிஸ்துவின் காரியங்களில் எடுத்து நமக்க அறிவிப்பார். கடவுளைச் சந்திக்க நம்மை அவர் ஆயத்தப்படுத்துவார். மேலே சொல்லியபடி திரித்துவத்தைப்பற்றிய வேத உபதேசம் வெறும் சொற்பொழிவன்று. நமது நித்திய இரட்சிப்புக்கு அவசியமான மூல உபதேசமாயிருக்கிறது. இரட்சிப்புக்குரிய **திரித்துவ செயல்கள்** கீழ்க்காணுமாறு அமைகின்றன.

**பிதா** கணக்கில்லாத மக்களைத் தெரிந்துக்கொண்டார்.(எபே 1:3-6), **குமாரன் அம்மக்களுக்காகத் தம் இரத்தஞ்சிந்தினார். பரிசுத்தஆவியானவர் அவர்களை உயிர்ப்பிக்கிறார்** அல்லது **பிதா** உலகின் தோற்றத்திற்குமுன் நம்மைப்பெயர் சொல்லி முன் குறித்தார். **குமாரன்** இரண்டாயிரத்துபதினேழு ஆண்டுகளுக்குமுன் நமக்காக மாண்டார்.

**பரிசுத்த ஆவியானவர்** இப்பொழுது நமக்குள் கிரியை நடப்பித்துக்கொண்டு வருகிறார். மேற்சொல்லிய சுருக்கம் ஓரளவுக்கு மட்டும் பயன்படும். திரித்துவத்தின் மூவர் மக்களது இரட்சிப்பின் செயலாற்றும் **மூன்று வகைகள் என்று நாம் எண்ணலாகாது.** அவ்வாறு எண்ணுவது மக்களையே நடுமையமாகப்பாவிப்பதாகும். மனிதனை நடுமத்தியில் நிலை நிறுத்துவது தவறு. கடவுள் மக்களை இரட்சிக்கக் கடமைப்பட்டவர் அல்லர். மக்களை இரட்சிக்க ஒரே கடவுள் மூவராய்த்தோன்றினார் என்றும் இல்லை. ஒரே கடவுள் அனாதிகாலமாய்ப் **பிதா,குமாரன்,பரிசுத்த ஆவியானவராகிய மூவராயிருந்தார்.** அவர் ஒருவரிடத்தில் **ஒருவர் அன்பு கூறும் மூவராயிருக்கின்றமையால்** அவர் இரட்சிக்கச்சித்தங்கொடதுமல்லாமல் இரட்சிக்கும் செயலில் அதிக மகிழ்ச்சிகொள்ளும் கடவுளாவார். **இரட்சிப்பு** என்ற திட்டத்தில் மூவரும் ஒருமனப்பட்டிருந்தார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. கடவுள் அன்பாயிருக்கிறார்.

**திரித்துவம்** மாறாத **அன்பு நிரம்பிய ஓர் ஐக்கியம்.** இந்த அன்பு வழிந்தோடி நம்மையும் இந்தத் **தெய்வீக ஐக்கியத்தில் கொண்டு வந்து சேர்க்கச் செயாற்றிவருகிறது.** அவர்கள் எல்லாரும் **ஒன்றாயிருக்கவும், நீர் என்னிலும் நான் உம்மிலும் இருக்கிறதுபோல,** அவர்கள் நம்மிலிருக்கவும் வேண்டிக் கொள்ளுகிறேன்.(யோவான் 17:21). ❖❖❖❖❖❖❖❖❖

# TALKING BIBLE

## பேசும் வேதாகமகருவி:

வேதம் வாசிக்க தெரியாதவர்கள், கண்பார்வை இழந்தவர்கள், வியாதி படுக்கையில் இருப்பவர்கள், வயது முதிர்ந்தோர்கள் முழு வேதத்தையும் அவரவர்களின் ஜென்ம மொழியில் கேட்க நவீன கருவியில் ஆடியோ பைபிள்(Audio Bible) என்ற பெயரில் தமிழ்,மலையாளம், கன்னடம்,தெலுங்கு இன்னும் பல இந்திய மொழிகளில் வேத வசனங்களை நவீன கருவிகளின் மூலமாக வாசிப்பதை கேட்க கர்த்தர் நல்ல ஏற்பாட்டை செய்துள்ளார்.

நீதி 28:9ல் வேதத்தை **கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபம் அருவருப்பானது.** அந்த ஜெபத்தை நான் (வெறுக்கிறேன்-மலையாள மொழிபெயர்ப்பு) என்று கர்த்தர் எழுதியுள்ளார். ஓசியா 4:6ல் பெற்றவர்கள் **என் வேதத்தை** மறந்தார்கள் நானும் உங்கள் **பிள்ளைகளை** மறப்பேன் என்று கர்த்தர் கூறுகிறார்.

என் வேதத்துக்கு **நடுங்கிறவனையே** நான் நோக்கி பார்ப்பேன் என்று கர்த்தர் கூறுகிறார். சங் 107:20 அவர் தமது வசனத்தை அனுப்பி **அவர்களை குணமாக்கி** அவர்களை அழிவுக்கு தப்புவிக்கிறார். வேதம் வாசிக்காமல் எவ்வளவு உபவாசித்து ஜெபித்தாலும், அந்த ஜெபம் கேட்கப்படுவதில்லை. ஜெபம் என்பது நாம் **தேவனோடு பேசுவது** ஆகும். ,வேத வசனம் மூலம் **கர்த்தர் நம்மோடு பேசுகிறார்.**

முதலில் வேதத்தின் மூலமாய் கர்த்தர் பேசுவதை கேட்டு கீழ்ப்படிந்தால் ஜெபத்துக்கு பதில் தானாக கிடைக்கும். எழுத,படிக்க தெரியாது, கண் தெரியாது,பார்வை குறைந்து விட்டது,வீட்டில் தங்கும் நேரம் குறைவு. அதனால் வேதம் படிக்க முடியவில்லை என்பவர்களுக்கு பேசும் வேதம் என்ற இப்படிப்பட்ட நவீன கருவிகளை வாங்கி பயனடையலாம். கார்,பஸ்,ரயில் பயணம் செய்பவர்கள் கை அளவுள்ள இந்த கருவியை பாக்கெட்டில் வைத்துக்கொண்டு செவிக்குள் பொருத்தி கேட்கும் **இயர்போன்** கருவி மூலம் **மற்றவர்களுக்கு சத்தம்கேட்காதபடி** நீங்கள் மட்டும் கேட்கும்வசதி இந்த கருவியில் உண்டு. அதில் உள்ள தொடு கருவிமூலம் வேதத்தில் எந்த புத்தகம் வேண்டுமோ, எந்த அதிகாரம் கேட்க வேண்டுமோ அவைகளை இமைபொழிதில் நீங்களே பட்டனை அமுக்கி மாற்றி கேட்டுக்கொள்ள நல்ல ஏற்பாடு இந்த கருவியில் உண்டு.

நம் வேத புத்தகத்தின் கடைசி புத்தகமான வெளிப்படுத்துதல் முதல் அதிகாரத்தில் இந்த வசனங்களை வாசிக்கிறவனும்,**கேட்கிறவர்களும்,** இதில் எழுதியிருக்கிறவைகளை கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்.வெளி 1:3 என்று எழுதி இருக்கிறது. இந்த கருவியை வாசகர்கள் மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். அந்த கருவி தேவைப்படுபவர்கள் **எந்த பாஷையில்** அந்த **பேசும் பைபிள்** வேண்டும் என்பதை கடிதத்தில் தெளிவாக குறிப்பிட்டு உங்கள் முழுவிலாசத்தையும், கைபேசி எண்ணையும் எழுதவும். இதன் விலை சுமார் 1400ரூபாயாக இருக்கும் என்று நம்புகிறேன். அவர்களுடைய விலாசம்:

**World Cassette Outreach of India(WCOI)**

**No.90,Osbome Road, Bangalore - 560042.**

Ph:91-8025560959, E-mail: wcoindia@gmail.com,www.wcoi.org.

# திருநெல்வேலி மாவட்டம் பாவூர்சத்திரம் கூட்டங்கள்

## IEM மிஷனரி தரிசன கூட்டங்கள்





**இந்திய அருட்பணி இயக்கம்** (IEM) ஏற்பாடு செய்த 3 நாட்கள் கூட்டங்களில் தென்காசி அருகே **பாவூர்சத்திரம்** என்ற ஊரில் ஷாலோம் மெட்ரிக் பள்ளி மைதானத்தில் மிக சிறப்பாக நடைபெற்றது.

IEM மேற்கு சபை மன்ற தலைவர்.**Rev.K.அருள்ராஜ் பிச்சமுத்து.MA,BD**., அவர்கள் தலைமையில் ஆசீர்வாதமாக அமைந்தது. குஜராத் ஆதிவாசி மிஷனரிகள்,IEM மிஷனரி சபை மக்கள் தங்கள் மொழியில் தங்கள் கலாச்சார பாஷையில் பாடல்களை பாடியதும் இரண்டு பூசாரிகளும்,மந்திரவாதிகளும் மனந்திரும்பி கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஜீவனுள்ள அவர்களின் சாட்சிகள் மக்கள் மனதை தொட்டது.

குஜராத்அருகே பாகிஸ்தான் எல்லையில் ஊழியம் செய்யும் IEM மிஷனரி தன் அனுபவங்களை பகிர்ந்துக்கொண்டார். IEM பொதுசெயலர் **Rev.Dr.ராஜாசிங் எலியாஸ்** அவர்களும், IEM ஊழியங்களின் ஆரம்பகால சரித்திரங்களை விளக்கி குடும்பங் களுக்கான நல்ல செய்தியை பகிர்ந்துக் கொண்டார்.

அந்த மைதானத்தில் நடந்த மிஷனரி கூட்டங்களில் நான் கர்த்தரின் செய்தியை 3 நாட்கள் பகிர்ந்துக்கொண்டது என் மனத்துக்கு மிகவும் திருப்தியாக அமைந்தது. IEM மிஷனரி ஸ்தாபனத்தில் ஏறக்குறைய 9050 மிஷனரிகளும்,10 மொழிகளில் வேதாகமம் மொழிபெயர்ப்பு ஏற்பாடுகளும் நடந்துக்கொண்டிருப்பதையும் **சபை ஊழியம்,மருத்துவபணி,சிறுவர் விடுதி, சமுதாய மேம்பாடு** ஆகிய ஊழியங்கள் IEM மூலமாக நடந்துக்கொண்டிருப்பதையும், **ஆதிவாசி சிறுவர்களுக்காக** வட இந்தியாவில் சுமார் 24 இடங்களில் விடுதிகள் நடந்துக்கொண்டிருப்பதையும்,**மிஷனரி ஊழியங் களைப்பற்றியும்** அக்கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது. உலக முடிவில் கர்த்தர் IEM போன்ற பல மிஷனரி ஸ்தாபனங்கள்மூலமாக **இயேசுவே தெய்வம்** என்று அறிவிக்கும் பணி ஏராளமாக நடைபெற்றுகொண்டிருப்பதை கேள்விப்பட்டு தேவனை துதிக்கிறேன்.

FMPB யில் முதல் **பொது செயலாளரும்**, FMPBயின் முதல் பத்திரிக்கைக்கு **அறைகூவல்** என்ற பெயர் சூட்டியவரும், உலக வேத பண்டிதருமான மறைந்த Dr.Rev**.தியோடர் வில்லியம்ஸ்** அவர்கள் தொடங்கிய மிஷனரி ஸ்தாபனம்தான் **IEM என்பது.** இப்படிப்பட்ட மிஷனரி பணிகளை தாங்க விரும்பும் **தமிழ்,மலையாள** ஜாமக்காரன் வாசகர்கள் கீழ்காணும் விலாசத்தில் தொடர்புக்கொள்ளலாம்.

**Indian Evangelical Mission(IEM),**

**38, Langford Road,**

**Bangalore-560025.**

**Dr.Rev.தியோடர்வில்லியம்ஸ்** அவர்கள் எழுதிய ஆழமான வேதபாடங்கள் **ஆங்கிலம்,தமிழ்,மலையாளம்** போன்ற பல பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

மேலும் அவருடைய **பிரசங்கம், பைபிள் ஸ்டடி** இவைகள் யாவும் CDயிலும் உண்டு. தேவையானவர்கள் மேலே உள்ள விலாசத்தில் எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

**செய்திகள்!** **செய்திகள்!!**

## எகிப்தில் பயங்கரம்: 26 கிறிஸ்தவர்கள் சுட்டுக்கொலை

கெய்ரோ மே.27: - எகிப்து நாட்டில் சிறுபான்மையினராக உள்ள கிறிஸ்தவர்கள்,சமீப காலமாக தாக்குதலுக்கு ஆளாகிவருகின்றனர்.

கடந்தமாதம் 9ம்தேதி அங்குடாண்டா அலெக்சாண்டிரியா நகரங்களில் தேவாலயங்களை குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல்களில் 46பேர் கொன்று குவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் நேற்று அங்கு தலைநகர் கெய்ரோவில் இருந்து 250 கி.மீ தொலைவில் அமைந்துள்ள புனித அன்பாசாமுவேல் மடத்துக்கு ஒரு பஸ்சில் கிறிஸ்தவர்கள் சென்று கொண்டிருந்தனர். அந்த பஸ்சை துப்பாக்கி ஏந்திய நபர்கள் வழி மறித்தனர். பஸ் நின்றவுடன் அதில் பயணம் செய்தவர்களை குருவிகளை சுடுவதுபோல சரமாரியாக துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பினர். ரத்த வெள்ளத்தில் பலரும் சாய்ந்தனர்.

பதறவைக்கும் இந்த சம்பவத்தில் 26 பேர் குண்டு பாய்ந்து உயிரிழந்தனர். 26 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் மீட்கப்பட்டு ஆம்புலன்சுகளில் ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் சிறுபான்மையினர் மத்தியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. இதற்காகவும் நம் ஜெபிக்கவேண்டியது கட்டயாமாகும். உலகம் அனைத்திற்கும் நாம் ஜெபத்தில் ஜெபிப்பது நல்லது.

### முக்கிய அறிவிப்பு:

டாக்டர். புஷ்பராஜ் (ஜாமக்காரன்) என்ற பெயரில் எனக்கு **வாட்ஸ் ஆப்,பேஸ்புக்** எதுவும் இல்லை. என் பெயரிலோ, ஜாமக்காரன் பெயரிலோ யாரைக்குறித்தாவது எழுதப்பட்டிருந்தால் அல்லது புகைப்படங்கள் வெளியிட்டிருந்தால் அதற்கும் எனக்கும் வாட்ஸ் ஆப்,பேஸ்புக்கில் எந்த சம்பந்தமும் இல்லை என்பதை இதன்மூலம் அறிவிக்கிறேன். அப்படி எதையாவது என் பெயரில் அல்லது ஜாமக்காரன் பெயரில் கண்டால் உடனே எனக்கு அறிவிக்கவேண்டுறேன்.

**-டாக்டர்.புஷ்பராஜ்**

## WHY IS IT DANGEROUS TO CONSULT ASTROLOGERS?

Astrology is the study of celestial influences on human lives for the purpose of fortune telling. This practice is clearly condemned and prohibited in the Bible(Deut.18:10-14). Astrologers will be burned down in the judgement of God(Isa 47:13-14). Stars and other celestial bodies are meant to be signs of the seasons. They are not meant to rule over the destiny of the people. Astrologers ascribe undue power and significance to these mere creations of God. God has not entrusted the salvation and furture of humanity to the predictions based on the positions of the stars. Consulting astrologers, therefore is idolatrous, sinful and destructive.

**- Shivaraj.K**

JULY 2017

# Printed Book

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.